வருடச் சந்தா                    போஸ்டேஜ் உள்பட ரூ. 4

[ஸத்க்ரந்தப் ப்ரகாசந ஸபையில் மெம்பர்களாகச் சேர்ந்தவர்கள்
இதற்காகத் தனிச் சந்தா செலுத்தவேண்டா]

# ஸ்ரீராமாநுஜன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

— 3 —

பேரியல்நெஞ்சே அடிபணிந்தே னுன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்தி * பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை யிராமாநுசமுனிக் கன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீ ழென்னைச் சேர்த்ததற்கே.

மதராஸ்

ஸத்கிரந்த ப்பிரகாசன சபையின் வெளியீடு

கிடைக்குமிடம்: P.B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

http://acharya.org

# சென்னை சத்க்ரந்த ப்ரகாசன சபையின்
# ஒரு முக்கியமான அறிக்கை

இந்த சபையின் மூலமாகத் தமிழ்லிபியிலும் தெலுங்குலிபியிலும் அச்சிடப்பட்டு வரும் புத்தகங்களில் வருஷம் ஒன்றுக்கு பெரிய ஸைஜில் 600 பக்கங்களுக்குக் குறையாமல் பதிப்பித்துக்கொடுக்கப்படுமென்று இதுவரை நிபந்தனை செய்யப்பட்டிருந்தது. இனி 800 பக்கங்களுக்குக் குறையாமல் [தனித் தனி தமிழிலும் தெலுங்கிலும்] பதிப்பித்துக்கொடுப்பதாக நிபந்தனை. எனவே வருஷந்தோறும் அதிகப்படியாக 200 பக்கங்கள் [இந்த பத்திரிகை ஸைஜில்] பதிப்பித்துத் தரப்படுமென்றதாயிற்று.

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில் 250 ரூ செலுத்திப் பேட்ரன்களாகவோ, 100 ரூ. செலுத்தி லைப் மெம்பர்களாகவோ, மாதந்தோறும் 12 ரூ. செலுத்தி ஆர்டினரி சந்தாதாரர்களாகவோ சேர்ந்தவர்கள் இந்த ஸ்ரீ ராமாநுஜன் பத்ரிகைக்காகத் தனியே சந்தா செலுத்தவேண்டாமென்பதை மறுபடியும் நினைப்பூட்டுகிறோம். ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில் மெம்பர்களாகச் சேராமல் ஸ்ரீ ராமாநுஜன் பத்ரிகையை மாத்திரம் பெற விரும்புமவர்கள் வருடச்சந்தா 4 ரூ மணியார்டர் செய்யவேணும்.

ஸத்க்ரந்தப்ரகாசந ஸபை மெம்பர்கள் மதராஸ், காஞ்சீபுரம் தவிர இதரவூர்களிலிருப்பவர்களாயில் புத்தகங்களைத் தபால் மூலமாக அனுப்புவதற்காக போஸ்டேஜ் தனியே 1—8—0 செலுத்தவேண்டும்.

ஷை ஸபையின் மூலமாக இரண்டு பெரிய க்ரந்தங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன; (1) திருவாய்மொழியீடு-பகவத்விஷயம் (2) வேதாந்ததேசிகனருளிச்செய்த முப்பத்திரண்டு ரஹஸ்யங்கள். இந்தக்ரந்தங்களிரண்டையுமோ ஏதேனுமொன்றை மாத்திரமோ தனியாகப்பெற விரும்புமவர்கள்-பகவத்விஷயத்திற்காக 20 ரூபாயும் தேசிகரஹஸ்யங்களுக்காக 5 ரூபாயும் 31-12-48 தேதிக்குள் செலுத்தினால் அன்னவர்களுக்கு ஸௌகரியமுண்டு.

இதைப்பற்றின கடிதப்போக்குவரத்துக்கள் யாவும் கீழ்க்கண்ட விலாஸப்படி யாகுக.

P. B. அண்ணங்கராசாரியார்.
காஞ்சீபுரம்

10—11—48

http://acharya.org

3

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை
யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை
[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]
ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

| முதல் தொகுதி | 10-11-1948 | 3-வது பகுதி |
|---|---|---|

## ஸ்ரீராமாநுஜன்.

"ராஜஹம்ஸம்—ப்ருங்கராஜம்—யதிராஜமீடே".

மணவாளமாமுனிகள் யதிராஜவிம்சதியில் இரண்டாவது ச்லோகத்தில் எம்பெருமானாரை ஹம்ஸமாகவும் வண்டாகவும் அருளிச்செய்துள்ளார். *ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸம் என்றும் *ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்கராஜம் என்றும். (அதாவது) ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளிலே ராஜஹம்ஸமாயிருப்பவர்; நம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளிலே சிறந்த வண்டாக இருப்பவர் என்று கூறியவாறு. எம்பெருமானார் *தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளன்* [இராமாநுச நூற்றந்தாதி—31] என்கிறபடியே தேவப் பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயிருந்தும் ஸ்ரீரங்கநாதனால் விசேஷகடாக்ஷம் செய்தருளப்பெற்றுத் தென் திருவரங்கம் சென்று சேர்ந்து * யாவச்சரீரபாதம் 'அத்ரைவ' ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ * [இவ்வுடல் விழுந்தளவும் இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே இனிது வாழக்கடவீர் - சரணாகதிகத்யம் - 19.] என்று திருவரங்கச் செல்வனால் அநுக்ரஹிக்கப்பட்டு அப்பெருமானுடைய திருவடிவாரத்தின் கீழேயே இனிது வாழ்ந்தபடியினால் ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜ ராஜஹம்ஸம் என்றருளிச் செய்யலாயிற்று. இனி ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜப்ருங்கராஜம் என்ற விசேஷணத்தினால் - ஸ்வாமி நம்மாழ்வாரது திருவடித்தாமரைகளிலே வண்டுபோல் படிந்திருப்பவரென்றது.

ஆகவிப்படி ஸ்வாமியை ஹம்ஸமாகவும் வண்டாகவும் கூறினதிலிருந்து தேறுகின்ற ஸ்வாமியின் பெருமைகளை ஸ்வாபதேசார்த்தாநுபவப்ரணாளியாலே வெளியிடுகிறோமிங்கு. ஆழ்வார்கள் தமது திவ்யப்பிரபந்தங்களிலே அன்னங்களையும் வண்டுகளையும் தூதுவிடுவதாக அருளிச்செய்வதுண்டே; அங்கு எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர்களையே தூதுவிடுவதாக உள்ளுறை பொருளாகையாலே அதைத் திருவுள்ளம்பற்றி ஸ்வாமியையிங்கு அன்னமாகவும் வண்டாகவுமருளிச் செய்தது மிகப்பொருத்தம். அன்னத்தின் படிகளும் வண்டின் படிகளும் ஸ்வாமிபக்கலிலே நிரூபிக்கப்படுகிறபடியைக் காணீர்;—

ஹம்ஸத்திற்குள்ள தன்மைகள் ஸ்வாமிபக்கலிலே குறையற்றிருக்கின்றன. எங்ஙனே யென்னில்; (1.) நீரையும் பாலையும் கலந்துவைத்தால் அவற்றைப் பிரிக்கவல்லமையுடையது ஹம்ஸம் என்று

http://acharya.org

பிரமாணங்களினாலறிகின்றோம்; * ஹம்ஸோ யதா க்ஷீரமிவ அம்புமிச்ரம் * என்பது முதலான வசனங்கள் காண்க. இதனால் ஹம்ஸமானது ஸாராஸாரவிவேகத்தில் மிகுந்தவல்லமையுடையது என்பது தேறும். ஸ்வாமிதாமும் * அஸாரமல்பஸாரஞ் ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே * என்றபடி ஸாராஸாரமிச்ரமாயிருந்த சாஸ்திரங்களிலே அஸாரமாயும் அல்பஸாரமாயுமுள்ளவற்றை யெடுத்துத்தள்ளி மிகவும் ஸாரமானவற்றையே கைக்கொண்டவர். பாஹ்யமதங்களையும் குத்ருஷ்டிமதங்களையும் நிரஸித்து ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யஉபய வேதாந்தப்ரவர்த்தந ப்ரவீணராயெழுந்தருளியிருந்து ரஹஸ்யார்த்தங்களில் பஹிரங்கமான அர்த்தங்களைத் தள்ளி அந்தரங்கமான அர்த்தங்களைக் கொண்டருளினவர் என்பது இங்கு விவக்ஷிதம்.

அப்படிப்பட்ட அர்த்தங்களில் ஒன்று இங்கு எடுத்துக்காட்டுவோம்:—

திருவாய்மொழி வியாக்கியானத்தில் பல விடங்களில் எம்பெருமானாருடைய நிர்வாஹமென்று விலக்ஷணமான அர்த்தங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கேண்மின்; * உயர்வறவுயர்நலம் * என்கிற முதற்பாட்டினீற்றடியில் துயரறுசுடரடி என்றவிடத்திற்கு - "அடியார்களுடைய துக்கங்களையெல்லாம் அறுக்கிற [அதாவது போக்கடிக்கிற] திருவடி" என்று எம்பெருமானார்க்கு முன்புள்ள ஆசாரியர்கள் அருளிச்செய்தார்களாகவும், எம்பெருமானார் அப்படியன்றிக்கே [அதாவது, துயரறுக்குஞ் சுடரடியென்று கொள்ளாமல்] 'துயரறும் சுடரடி' யென்றுகொண்டு தனக்குண்டான துயரைத் தான் தவிர்த்துக்கொள்ளுந்திருவடிகளென்று பொருளருளிச்செய்ததாகவும் வியாக்கியானமுள்ளது. பூருவர்கள்பணித்த அர்த்தத்திற்காட்டிலும் ஸ்வாமிபணித்த அர்த்தத்தில் என்ன சிறப்பு? என்பதை ஆராய்ந்து அறியவேணும். எம்பெருமான் அடியார்கள் படுந்துயரைத் தீர்க்கிறானென்பது இதிஹாஸபுராணாதிகளில் தேறின அர்த்தமே அது மறுக்கத்தக்கதன்று. எம்பெருமானார் அதைத் தள்ளி வேறு பொருள் பணித்ததானது அப்பொருள் அஸம்பத்தம் என்கிற திருவுள்ளத்தினாலன்று; அதிற்காட்டிலும் மிகுந்த ஸ்வாரஸ்யம்பெற்று நெஞ்சை யுருக்கும்படியான அர்த்தம் இது என்பதே ஸ்வாமியின் திருவுள்ளம். அடியார்கள் துயருறுங்காலத்தில் எம்பெருமான் தானும் துயருற்றிருப்பதாக இதிஹாஸங்களினாலறிகின்றோம்; துயருறுவது என்பது ஹேயகுணமாயிற்றே; ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமானிடத்தில் இந்த ஹேயகுணமிருப்பதாக இசையலாமோ வென்று சங்கிப்பாருடைய சங்கையைப் போக்கிக்கொண்டே வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் நகரத்து ஜனங்கள் இராமபிரானுடைய திருக்குணங்களைப் புகழ்ந்து கூறுவதாக இட்ட ஸந்தர்ப்பத்தில் *பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே* என்று திருக்கல்யாணகுணங்களையே தாங்கள் தசரத சக்கரவர்த்தியிடம் எடுத்துக் கூறப்போவதாக ப்ரதிஜ்ஞை செய்வதை முன்னம் காட்டிவிட்டு, மேலே *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:* என்று [மனிதர்கள் துயருறுமிடத்து இராமபிரான்தான் மிகமிகத் துயருறுவதாகச்] சொல்லி இதையொரு கல்யாண குணமாக நாட்டிவைத்தார். அடியார்கள் படுந்துயரை அறுக்கிறான்பகவான் என்பது இருக்கட்டும்; அவ்வடியார்கள் துயர் தீரும்வரையில் தானும் துயருற்றவனாகவேயிருந்து அவர்கள் துயரற்ற பிறகே தானும் துயரற்றவனாகுகை என்னுமிப்பொருள் பகவத்குணாநுபவரஸிகர்களுடைய நெஞ்சையுருக்குமதாதலால் இச்சிறந்த பொருளை எம்பெருமானார் திருவுள்ளம்பற்றினாரென்க. இத்திருக்குணத்தை வால்மீகிபகவான் ஸ்ரீராமாயணத்தில் ஓரிடத்திலன்று, பலவிடங்களிலும் மூதலிக்கிறபடி காணீர்;* அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ * (ஸம்க்ஷேபரா-185.) என்ற ச்லோகத்தில் விஜ்வர: என்கிறபதம் உயிரானது; விபீஷணாழ்வான் துயர்தீர்ந்து முடிசூடும்வரையில் பெருமாள்தாம் துயருற்றிருந்ததாகவும் அவனை முடிசூட்டியே தாம் துயர்தீரப்பெற்றதாகவும் நன்கு விளக்குகின்றதன்றோ விஜ்வர: என்னுமிப்பதம். இப்படிப்பட்ட ஸாரப்பொருள்களை விவேகித்து வெளியிடுவதனால் ஸ்வாமி ஹம்ஸமென்னத்தகுந்தவர்.

http://acharya.org

2. இன்னமும், சாந்தோக்ய உபநிஷத்தில் ஜாநச்ருதியின் உபாக்கியானமொன்று ஓதப்பட்டிரா நின்றது. ஜாநச்ருதியென்கிற க்ஷத்ரியன் மிக்க பெருஞ்செல்வம் படைத்தவனாகையாலே அன்னதானம் முதலியன விசேஷமாகச் செய்து கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானமென்பது சிறிது மில்லாமலிருந்து பல்லபல்லாக்ஷ ரென்கிற இரண்டு மஹரிஷிகள் அவனிடத்திலே இரக்கங்கொண்டு இவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானத்தையுண்டாக்கவேணுமென்றெண்ணி இரண்டு ஹம்ஸரூபிகளாய் அவன்மேலே பறந்துகொண்டு போகையில் பல்ல னென்கிற ஹம்ஸம் பல்லாக்ஷ னென்கிற ஹம்ஸத்தைப்பார்த்து 'ஜாநச்ருதிமஹாப்ரபுவின் மேலே நிழல் படாதபடி கவனித்துப்போ' என்று சொல்லிற்று. அது கேட்ட அந்த ஹம்ஸம், "இவன்மேல் நிழல் பட்டாலென்ன? அதனாலென்ன கெடுதல்? இவன் ரைக்வரைப்போல் ப்ரஹ்மஜ்ஞாநியா என்ன? ஞானஹீநனாவிவனை நாம் கௌரவிக்கவேணுமோ?" என்று அவஹேளனமாகச் சொல்லிற்று. அதைக்கேட்ட ஜாநச்ருதி துக்கங்கொண்டவனாய் அந்த ரைக்வரைத் தேடிச்சென்று அநுவர்த்தித்து ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கவேணுமென்று பிரார்த்தித்து அவரிடத்தில் உபதேசம் பெற்றானென்பது அவ்வுபாக்கியானத்தின் ஸாரம். இக்கதையின்படி ப்ரஹ்மஜ்ஞான ப்ராப்திக்கு ஹம்ஸம் ப்ரேரகமானதுபோல எம்பெருமானார்தாமும் அதற்கு ப்ரேரகர் என்பது அறியத்தக்கது. "பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று பேசிவரம்பறுத்தார்பின்" என்று உபதேசரத்தினமாலையிலருளிச் செய்தபடி ஸ்வாமி நியமனம் தந்தருளாவிடின் இவ்வுலகில் ப்ரஹ்மஜ்ஞானப்ரசாரத்திற்கு வழியேயில்லையாமன்றோ

3. எம்பெருமான் வேதசாஸ்திரங்களை வெளியிடத் திருவுள்ளம்பற்றியபோது ஹம்ஸரூபத்தைப் பரிக்ரஹித்தருளினதாக சாஸ்த்ரங்களினாலறிகிறோம்; * அன்னமாய் நூல்பயந்தான் * என்றும் * அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த * என்றும் ஆழ்வார்களுமருளிச் செய்கிறார்கள். சாஸ்த்ரோபதேசத்திற்கு ஹம்ஸமாயிருத்தல் அவசியமாயினபடியாலே சாஸ்த்ரங்களை யுபதேசித்தவர்களில் தலைவரான எம்பெருமானாரை ஹம்ஸமென்றது பொருத்தமே.

4. ஹம்ஸத்தினுடைய இயல்வைச் சொல்லுமவர்கள் * ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி * என்கிறார்கள்; அதாவது ஹம்ஸம் ஒருகாலும் சேற்று நீரில் கால்பொருந்தாதென்றபடி. அப்படியேயன்றோ எம்பெருமானார் படியும். திருவிருத்தத்தின் முடிவு பாசுரத்தில் "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே" என்று இந்த ஸம்ஸாரநிலமே சேற்றுநிலமாகச் சொல்லப்பட்டுள்ளது; இதில் கால் பொருந்தாதவர்களில் தலைவராயிற்று எம்பெருமானார்.

5. திவ்யதேசங்களை வருணிக்கும்போது ஆழ்வார்கள் அன்னம் மாதர்களின் நடையைப் பின் சென்று நடப்பதாகக் கூறுகிறார்கள்; * பெடையோடன்னம் பெய்வளையார்தம் பின் சென்று நடையோடியலி * என்று திருமங்கையாழ்வார் திருநறையூர்ப்பதிகமொன்றில் கூறியுள்ளது காண்க. ஸ்வாமிதாமும் * அன்னநடையவணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின் செல்பவர். (அதாவது-) பிராட்டியின் நடையாவது நடத்தை; சேதநர்களைக்குறித்து எம்பெருமானிடத்தில் மன்றாடிப் பேறு பெறுவிப்பதே பிராட்டியினுடைய முக்கியமான நடத்தையாகும். அதை ஸ்வாமிதாம் அநுசரிக்கையாவது-தாமும் அப்படியே எம்பெருமானிடத்தில் மன்றாடி இன்றிருக்கும் நம்போல்வார்க்கும் பேறு பெறுவித்ததேயாம். இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ந்யாஸதிலகத்தில் * உக்த்யா தநஞ்ஜய !விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம் * என்றச்லோகத்தினாலும், மணவாள மாமுனிகள் யதிராஜ விம்சதியில் * காலத்ரயேபி..........க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர, பவச்ச்ரிதாநாம் * என்றச்லோகத்தினாலும் வெளியிட்டருளினார்கள். அவற்றின் வியாக்கியானங்களிலே விரியவுரைத்தோம், கண்டு கொள்வது. பொதுவாகவே ஆசார்யர்களின் புருஷகாரமில்லாமல் எம்பெருமான் பேறுதரமாட்டானென்பதை * தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ * (ந்யாஸதிலகே)

http://acharya.org

என்ற ஸ்ரீஸூக்தியினால் கல்வெட்டாக வருளிச்செய்தார். எம்பெருமானார்க்கு இது விசேஷ நிரூபகமென்றுணர்க.

இங்ஙனே மற்றும் பலவகையான பொருத்தங்களும் உய்த்துணர்க.

இனி "ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜப்ருங்கராஜம்" என்று வண்டாக அருளிச்செய்ததன் பொருத்தங்களை நிரூபிப்போம்.

1 வண்டு மதுவ்ரத மென்று பேர்பெற்றிருக்கும். தேன்தவிர வேறொன்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல, * உளங்கனிந்திருக்குமடியவர்தங்களுள்ளத்தூறிய தேன் * என்றும் * தேனை நன்பாலைக் கன்னலையமுதை * என்றும் * எனக்குத் தேனே, பாலே கன்னலே, யமுதே * என்றும் பலவிடங்களிலும் தேனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானையே விரும்பி மற்றொன்றைக் கண்ணெடுத்துப் பாராமல் பகவதநுபவத்தையே விரதமாகக்கொண்டிருந்தவர் எம்பெருமானார்.

2. * வண்டினங்கள் காமரங்களிசைபாடும் * என்று குலசேகராழ்வாரும், * யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் * என்று பெரியாழ்வாரும், * வரிவண்டுதேதெனவென்றிசைபாடும் * என்று திருமங்கையாழ்வாரும் இப்படி மற்றும் பலரும் பணித்தபடியே யாழினிசை போன்ற இசைகளைப் பாடுவதையே இயல்வாகவுடையதாயிருக்கும் வண்டு; ஸ்வாமிதாமும் * யாழினிசை வேதத்தியல் * பண்ணார் பாடலாயிரம் * என்னப்பட்ட திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களின் கானத்தையே போதுபோக்காகவுடையராயிருந்தவர். "தமிழ் மறைகளாயிரமும்-மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" "பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய்மதமாய் விண்டிடவெங்களிராமானுசமுனிவேழம்" என்றவைகாண்க.

3. வண்டு வடமொழியில் சஞ்சரீக மென்று பேர்பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியுமது. அதுபோல ஸ்வாமிதாமும் * ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ் ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத்த்வாரவதீ ப்ரயாக மதுராயோத்யா கயா: புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி: * என்கிறபடியே *பதியேபரவித்தொழுந்தொண்டர்களில் தலைவராயிருந்தார்.

4. வண்டு எந்த ஸமயத்தில் எங்குச் செல்லவேணுமென்று நினைத்தாலும் தட்டுத் தடங்கலின்றியே புகுந்து ரமிக்கும்; ஸன்னிதிகளில் கர்ப்பக்ருஹங்களினுள்ளும் எம்பெருமான் திருமுடிமீதும் தாராளமாகப் புகக்காணாநின்றோம். அதுபோல, * பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப்புகலரிய * என்னும்படி திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்கவொண்ணாதபடி நெருக்க, *மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள் * என்னும்படியவதரித்தருளின எம்பெருமானார் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான எந்த திவ்யதேசங்களிலும் தடையும் சங்கையுமொன்றுமின்றிக்கே அதிகாரச் செல்வத்துடனே உள்ளே புகுந்து ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்து வாழ்ந்தவர் காண்மின்.

5. வண்டு சோலைகளிலேயே சுழலமிடும்; எம்பெருமானார்தாமும் * ஆராமஞ் சூழ்ந்தவரங்கம் * சிந்துபூ மகிழுந்திருவேங்கடம் * விரையார்பொழில் வேங்கடம் * என்னும்படியாகச் சோலைகள்மிக்க தலங்களிலேயே சுழலமிட்டவர். இப்படி மற்றும் பல பொருத்தங்கள் காண்க.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத்ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

# உபயராமாயண கதாஸாரம்.

ஸ்ரீ காஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர்.

— முன்னுரை —

இங்கு உபயராமாயணமென்றது ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும். ஸ்ரீ ராமபிரானது திவ்யசரிதையைத் தெரிவிக்கவல்ல ராமாயணங்கள் பல இருந்தாலும் இவையிரண்டு ராமாயணங்களே நமது தமிழ் நாட்டில் பெரும்பான்மையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவை கதைகளைத்தெரிவிப்பதற்காக மாத்திரமே தோன்றியவையல்ல. இவற்றின் சொல்லின்பமும் பொருளின்பமும் அந்தந்த பாஷையின் நரம்புகளை யறிந்தவர்கள் ஆழ்ந்து ரஸிக்கக் கூடியவை. ஆனாலும் கதையின் போக்கை யறிவதற்குப் பலரும் குதூஹலம் கொள்ளுகிறபடியால் கதையின் ஸாரத்தை மாத்திரம் எடுத்துத் தொகுத்து உலகுக்கு உதவ விரும்புகின்றோம். கம்பர் தாம் இராமாயணமியற்றியது வான்மீகி ராமாயணத்தைத் தழுவியே யென்பதைத் தாமே கூறியுள்ளார்—"தேவபாடையினிக்கதை செய்தவர் மூவரானவர் தம்முளும் முந்தியநாவினுரையின்படி நான் தமிழ்ப் பாவினாலிது பாடிய பண்பரோ" என்ற செய்யுளினால். ஆனாலும் சில பல விடங்களில் கதைவேற்றுமை காணப்படுகின்றது. அவ்வேற்றுமையை யறிவதற்கும் பாங்காக ஒவ்வொரு கட்டமாக எடுத்துக்கொண்டு வால்மீகி ராமாயண ப்ரக்ரியையையும் கம்ப ராமாயண ப்ரக்ரியையையும் கதை சிறிதும் விடாமலெழுதி மேலுங் கீழுமாகப் பதிப்பிக்கிறபடியிது:

*ஸ்ரீமத். வால்மீகி ராமாயணத்தின் பாலகாண்டத்தில் முதல்ஸர்க்கம்—ஸம்க்ஷேபராமாயணம்.*

2. வால்மீகியை நான்முகன் அநுக்ரஹித்தல்.
3. ராமாயண விஷய ஸங்க்ரஹம்.
4. குசலவர்களுக்கு ராமாயணோபதேசம்.
5. தசரத சக்ரவர்த்தியின் வாழ்வு கூறல்.
6. தசரதனது பெருமை கூறல்.
7. தசரத மந்திரி முதலானோர் சிறப்பு கூறல்.

*இனி, எட்டாவது ஸர்க்கத்தில்தான் தசரதனது புத்ரகாமேஷ்டி முயற்சி கூறத் தொடங்கினது. அதுமுதலாகவே இங்குக் கதையெழுதப் படுகின்றது.*

## வால்மீகி காட்டிய ராமாவதாரம்.

*தசரத மன்னவன் தனக்குப் புத்திரனுண்டாக வேண்டி வெகு நாளாகத் தவஞ்செய்து புதல்வனுண்டாகாமையால் தனக்குள் சிந்தித்துக் கொண்டிருக்கையில் "பிள்ளை பிறக்கும் பொருட்டு அசுவமேதயாகஞ் செய்யவேணும்" என்று ஓரெண்ணமுண்டாகி*

---

## கம்பராமாயணப்பகுதி.

கம்பர் தமது இராமாயணத்தில் பாலகாண்டத்தில் முதலாவதான ஆற்றுப்படலத்தினால் ஸரயூநதியின் வளங்களையும், இரண்டாவதான நாட்டுப்படலத்தினால் அந் நதி பாயப்பெற்ற கோசல நாட்டின் வளப்பத்தையும், மூன்றாவதான நகரப்படலத்தினால் அந்தக் கோசல நாட்டின் தலைநகரும் இராமபிரானது திருவவதார ஸ்தலமுமான அயோத்யா நகரத்தின் சிறப்புக்களையும், நான்காவதான அரசியற் படலத்தினால் அவ்வயோத்தி நகரத்தரசனாகிய தசரத மன்னவனது அரசாட்சிப் பெருமையையுஞ் சொல்லி முடித்திட்டு, ஐந்தாவதான திருவவதாரப் படலத்தினால் திருமால் இராமன் முதலிய நான்கு திருமேனியுடனே அத்தசரத சக்ரவர்த்திக்குப் புதல்வனாகத் தோன்றினமையைக் கூறுகின்றார். அவ்வவதார கட்டம் முதலாக இங்கு எழுதப்படுகின்றது.

## கம்பர் காட்டிய ராமாவதாரம்

*உலகம் முழுதினையும் ஊக்கத்துடன் ஆண்டு ஒப்பில் புகழ்படைத்து விளங்கும் தயரத மன்னவன் ஒரு நாள் தன் குலகுருவான வஸிஷ்டமஹாமுனியைத் தொழுது, "முனிவர் பெருமானே! என் முன்னோர்களும் யானும் இவ்வுலகத்தை மிக்க புகழுடன் ஆட்சி*

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

மந்திரிகளில் தலைவனாகிய சுமந்திரனைப்பார்த்து "நீ போய் எனது குருக்கள் புரோஹிதர்கள் யாவரையும் விரைவில் அழைத்துக் கொண்டு வருக" என்றனன். அதைக் கேட்ட சுமந்திரன் விரைவாகச் சென்று ஸுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், குலகுருவாகிய வஸிஷ்டர், மற்றுமுள்ள உயர்ந்த அந்தணர்கள் ஆகிய அனைவரையும் கூட்டி அரசன் மாளிகைக்கு அழைத்துக்கொண்டு வந்தனன். மன்னவன் அவர்களனைவரையும் பூசித்து அவர்களை நோக்கி, "பெரியீர்! மக்களைப் பெறவேண்டி மனங்கலங்கிப் புலம்புகின்ற எனக்கு அசுவமேதயாகஞ் செய்ய விருப்ப முண்டாயிருக்கிறது. இதை நீங்கள் இனிதாக நிறைவேற்றியருளவேண்டும்" என்ன, முனிவர்கள் தசரதனை நோக்கி மிகுந்த களிப்புடன் 'யாகத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேகரிப்பாயாக. மக்களைப் பெறவேண்டியதற்காக உனக்கு இந்தத் தருமபுத்தி யுண்டானபடியால் எவ்விதத்திலும் நீ வேண்டின புதல்வர்களைப் பெறுவாய்' என்று மொழிந்தனர். அரசனும் அவ்வந்தணர் மொழியைக்கேட்டு மகிழ்ந்து மந்திரிகளைப் பார்த்து "எனது குருக்கள் சொன்ன சொற்படி எல்லாப் பொருள்களையும் சேர்ப்பீர்களாக. மிக்க வல்லமையுள்ள நீங்கள் இந்த யாகம் நெறிமுறை தவறாது முடியும்படி முயல்வீர்களாக" என்றனன். மந்திரிகளெல்லோரும் 'அப்படியே செய்கின்றோம்' என்றனர். பிறகு அவ்வரசன் தனது மாளிகையைச் சேர்ந்து கௌஸல்யை முதலிய தன் மனைவிகளைப் பார்த்து 'நான் மகப்பேற்றிற்கு யாகஞ் செய்யப்போகிறேன்; நீங்கள் தீக்ஷை கொள்ளவேண்டும்' என்றுரைத்தனன். அவர்கள் அவ்வார்த்தை கேட்டு ஆனந்தக்கடலிலாழ்ந்தவராயினர். அச்வமேதயாகம் செய்யவிருப்பிய அவ்வரசனைப் பார்த்துச் சுமந்திரர் தனிமையிற் சொல்லுகிறார்;—[அது மேல்வருமாறு—]

அரசர்க்கரசே! நீர் இவ்வேள்வி செய்வதைப்பற்றி நான் ஒரு இதிஹாஸம் முன்னமே கேட்டிருக்கிறேன். ஸநத்குமாரர் உமக்கு மக்கள் உண்டாகும் விதத்தைக் குறித்து முனிவர்களின் முன்னிலையில் முன்னமே சொல்லியிருந்தனர். அது கேளீர்: காச்யபருக்கு விபண்டகரென்று பேர் பெற்ற ஓர் புத்திரர் உண்டு. அவருக்கு ருச்யச்ருங்க [கலைக் கோட்டு முனிவ] ரென்ற புதல்வர் உண்டாவர். அவர் காட்டிலேயே வளர்ந்து பிதாவுக்குப் பணிவிடைசெய்துகொண்டு முனியாகி அக்கானகத்திலேயே திரிந்துகொண்டிருப்பர். ரோமபாதனென்பவன் அங்கதேசத்துக்கு அரசனாகிப் புகழ்பெற்று விளங்குவான். அம்மன்னவன் நீதிநெறி தவறுதலால் அவனது நாட்டில் வெகு காலம் மிகக் கொடிய பஞ்சம்

—கம்பராமாயணம்—

புரிவது உமது திருவருளினாலேயே; அறுபதினாயிரமாண்டு யாதொரு குறையுமின்றி யான் அரசாண்டும் என் காலத்திற்குப்பிறகு இந்த ராஜ்யத்தை யாளுதற்குச் சந்ததியில்லையென்ற ஒரு குறைமாத்திரம் என் மனத்தை மிக வருத்துகின்றது; முனிவர்களும் அந்தணாளர்களும் இதுகாறும்போலவே இனிமேலும் குறையற வாழவேண்டுமாயின் எனக்கொரு புதல்வனிருக்க வேண்டியது அவசியமல்லவா? என்று விண்ணப்பஞ் செய்தனன்.

அது கேட்ட வசிட்டமுனிவன் அவ்வரசனது குறையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாமென்று ஆலோசிக்கையில், தேவர்கட்குத் திருமால் அபயமளித்த விருத்தாந்தம் நினைவிற்கு வரவே அதனைச் சொல்லத் தொடங்கினன். மன்னவனே! கீழே நடந்திருப்பதொரு செய்தியைச் சொல்லுகிறேன் கேளாய்; இந்திரன் முதலிய தேவர்கள் அரக்கர்களால் மிகவும் வருந்திச் சிவபெருமானை யடைந்து தங்கள் கஷ்டங்களை முறையிட, அக்கங்காதரக்கடவுள் அரக்கரையழிக்க எம்மாலாகாதென்று சொல்லி அத்தேவர்களுடனே பிரம

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

நேரிடும். அப்பொழுது அவன் மிக்க வருத்தங் கொண்டு அந்தணர்களை வரவழைத்து மழையின்மையாகிய இப்பஞ்சத்திற்கு மூலமான எனது பாபம் தொலையும்படி தக்க நியமங்களை எப்படி அநுஷ்டிக்கவேண்டுமோ, அதை எனக்குத் தெரிவிக்க வேண்டும்'' என்று வினவப் போகின்றனன். அவ்வந்தணர்களும் அம்மன்னனைப் பார்த்து 'ருச்யச்ருங்க மாமுனியை எவ்விதத்திலாவது இங்கு வரச்செய்து பூஜிப்பாயாகில் இக்கொடிய வறுமை விலகும்; அவர்க்கு நீ உனது மகளான சாந்தையை மணம் புரிவித்துக் கொடுப்பாயாக' என்று மொழியப் போகின்றனர். ரோமபாதனும் அவர்களது மொழியைக் கேட்டு, பிரமசரியந்தவறுதிருக்கும் அம்முனியை இங்கு வரவழைக்கும் வழி யாதோவென்று சிந்தித்து மந்திரிகளுடன் கலந்து புரோகிதர்களையும் மந்திரிகளையும் ஸத்கரித்து அங்கிருந்து ருச்யச்ருங்கரை யழைத்துக்கொண்டு வரும்படி நியமிக்கப் போகின்றனன். அவர்களும் மன்னவனது வார்த்தையைக் கேட்டு வருத்தமுற்றுத் தலைவணங்கிக்கொண்டு 'பிரானே! விபண்டக ரிஷிக்கு நாங்கள் மிகவும் அஞ்சுகின்றோம். அவரிடம் எங்களால் போக முடியாது. ஆயினும் ருச்யச்ருங்க முனிவரை வரவழைக்கும் உபாயங்களை விசாரித்துச்சொல்லுகிறோம்' என்று அரசனுக்கு நல்வார்த்தை சொல்லப்போகிறார்கள்; பின்பு அவர்கள் அம்முனிவரை அழைத்துக்கொண்டு வரத்தக்க உபாயங்களை ஆலோசித்து, அழகிய வேசிகளை இனிமையான தின்பண்டங்களுடன் அவருடைய ஆச்ரமத்திற்கு அனுப்பி அம்மங்கையர் மூலமாக அம்முனிவரை வரவழைப்பதென்று தீர்மானித்துக்கொண்டு 'மன்னனே! நாங்கள் இவ்வுபாயத்தால் அவ்வந்தணரை வரவழைப்போம். இதனால் அவரது பிரமசரியத்திற்கு யாதொரு தோஷமும் உண்டாகாது. விபண்டகரைப் பற்றியும் யாதொரு பயமும் நேரிடாது. நமது நாட்டில் பஞ்சப்பிணியும் நீங்கும்' என்று அவ்வரசனுக்குச் சொல்லப்போகின்றனர். அப்படியே ருச்யச்ருங்க முனிவர் வேசிகளின் ஸதுபாயத்தினால் அங்க தேசத்திற்கு வந்து சேர்ந்து ராஜ்ய க்ஷேமத்தை விளைவிக்கப் போகின்றனர். அன்றியும், இக்ஷ்வாகு வம்சத்தில் தசரதனென்னும் ஓர் மன்னவன் தருமத்திற் சிறந்திருக்கப் போகின்றனன். அவ்வரசன் அங்க தேசத்தரசனிடம் சென்று தான் புத்ரகாமேஷ்டி செய்ய விரும்பியிருப்பதை யறிவித்து அதை நன்கு நிறைவேற்றுதற்காக ருச்யச்ருங்க மாமுனிவரைத் தனது நகரத்திற்கு அனுப்புமாறு விரும்பப் போகின்றனன். அவ்வரசனும் அவரைத் தசரதனுடன் அனுப்பப் போகின்றனன். அத்தசரத மன்னவனும் அவ்வந்தணரையழைத்து வந்து அவரால் தான் விரும்பின புத்திரகாமேஷ்டியை நிறைவேற்றி நான்கு புதல்வர்களைப்பெறப்போகின்றனன்'' என ஸநத்குமாரர் முன்னமேமொழிந்திருக்கின்றார்.

—கம்பராமாயணம்—

னுள்ளவிடத்தே சென்றனன். சென்று பிரமனை யடிதொழுது தேவர்கட்கு அரக்கர்களால் நேர்ந்துள்ள துன்பத்தைக் கூறினன்; 'அரக்கர் தலைவனான இராவணனை யொழிப்பது நம்மால் முடியாத காரியம்; திருமால்தான் தனது கருணையினால் அவனைத் தொலைக்க வேண்டும்' என்பதுதான் அங்கு முடிவு செய்யப்பட்டது. உடனே அவர்கள் திருமாலை மனத்தினால் சிந்திக்க, அப்பெருமான் திருமகளோடு கருடன்மீதேறி வந்து அத்தேவர்கட்கு முன்னே காட்சி தந்தருளினன். இப்படி, நினைத்தமாத்திரத்திலேயே வந்து சேவை தந்தருளியதனால் அப்பெருமானால் தமது குறை விரைவில் முடியுமென்று பெருமகிழ்ச்சிகொண்ட தேவர்கள் ஆடியும் பாடியும் நிற்க, திருமால் கருடனினின்று இறங்கி அங்குள்ளதொரு மண்டபத்தே இடப்பட்ட செம்பொற்சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தனன்.

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

என்றிங்ஙனம் ஸுமந்திரன் சொல்லக் கேட்ட தயரதன் "அந்த ரிச்யச்ருங்க முனிவர் அங்கதேசத்திற்கு வந்து சேர்ந்தாரா? எவ்வுபாயத்தினால் வரவழைக்கப்பட்டார்? அதைச்சொல்ல வேணும்" என்ன, மீண்டும் ஸுமந்திரர் சொல்லுகிறார்;

அவ்வண்ணமாகவே ரோமபாதராஜ நகரத்திலின்றும் சில வேசிகள் இனிய பக்ஷணங்களுடன் புறப்பட்டுக் கலைக்கோட்டு முனிவரது வனத்திற் சென்று அவரருகில் அணுகுவதற்கு அஞ்சி எங்ஙனம் அவரைக் கிட்டலாமென்று ஆலோசித்திருந்தனர். அவரோ எப்போதும தந்தைக்குப் பணிவிடை செய்துகொண்டு ஆச்ரமத்தை விட்டு ஒரு நொடிப் பொழுதும் வெளிப்புறப்படாதவராய், அத்தந்தை யொருவர் தவிர வேறொரு ஆணையும் பெண்ணையும் கண்ணாலுங் காணாதவராய் வாழ்ந்திருந்தனர்; அன்னவர் ஒருநாள் தைவவசமாய் அந்த வேசிகளிருக்கு மிடத்தே வந்து அவர்களோடு இனிமையாகப் பேசித் தன்னைப் பற்றியும் நன்கு தெரிவித்து, அவர்களைத் தன் ஆச்ரமத்திற்குள் வெகு குதூஹலத்தோடு அழைத்துச் சென்று பலபல உபசாரங்களைச் செய்தனர். வேசிகளும் அவரை ஆரத்தழுவி, தாங்கள் கொண்டுவந்த பக்ஷணங்களையும் அவர்க்குத் தந்திட; அவரும் அவற்றை வாங்கி அருந்தி அதிசயித்து மகிழ்ந்தார்.

—கம்ப ராமாயணம்—

எல்லாத்தேவர்களும் அத்திருமாலை வணங்கி அரக்கரால் தமக்கு நேர்ந்துள்ள கொடுமையைக் கூறத் தொடங்கி 'விண்ணவரும் மண்ணவருமியற்றும் நற்கருமங்களுக்கெல்லாம் அரக்கர் மிகுந்த இடையூறு இழைக்கின்றாராதலால் தேவரீர் அவர்களைத் தொலைத்திடாவிடின் எங்களாற் பிழைத்திருக்க முடியாது' என்று முறையிட்டனர். அவர்களுள் பரமசிவன் "செங்கண்மாலே! நாங்கள் அறியாது அரக்கர்கட்கு வரங் கொடுத்ததனால் உலகங்கட்கெல்லாம் அளவற்ற தீம்பு உண்டாயிற்று; இவ்வுலகங்கட்கெல்லாம் தேவரீரே தலைவராதலால் அதனைத் தீர்த்து உலகத்தைக் காக்கவேண்டுவது உமது கடமையேயாகும்; இனிச் சிறிதுபோது தாமதித்திருந்தாலும் அவர்களால் உலகமெல்லாம் அழிந்திடும்" என்று விசேஷித்துக் கூறினன்.

அவற்றைச் செவிதாழ்த்திக் கேட்ட திருமால் அவர்களை நோக்கி 'இனி நீங்கள் சிறிதும் வருந்த வேண்டா; உங்கள் துன்பங்களைத் தீர்த்து இன்ப மளிப்பேன் யான்; அச்சம் நீங்கி வாழ்மின்; எனது சங்கு சக்கரங்களும் திருவனந்தாழ்வானும் எனக்குத் தம்பிகளாய் அமைய, நான் அயோத்தியில் தசரத சக்கரவர்த்திக்குப் புதல்வனாய்ப் பிறந்து அரக்கரது வரத்தையும் வாழ்வையும் ஒழிப்பேன்; நீங்கள் பூமியில் வானரங்களாகப் பிறந்திடுமின்' என்று சோதிவாய் திறந்து பணித்தனன். அது கேட்டுத் தேவர்கள் மிக மகிழ்ச்சிகொள்ள, திருமால் கருடன்மீதேறி யெழுந்தருளியாயிற்று. பிறகு நான்முகக் கடவுள் தேவர்களை நோக்கி "கரடிகளிற் சிறந்துள்ள ஜாம்பவான் முன்னமே எனது அமிசமாகத் தோன்றியுள்ளான்; திருமால் நியமித்தபடியே நீங்களெல்லீரும் போய் வானர வீரர்களாக அவதரித்திடுமின்" என்று கூறினன். பிறகு இந்திரன் சூரியன் அக்னி என்பவர்கள் வாலியையும் சுக்ரீவனையும் அங்கதனையும் தனது அமிசமாகக் கூறினர். வாயுவும் ருத்ரனும் அநுமானைத் தமது அமிசமாகக் கூறினர். மற்றைத் தேவர்கள் நாங்களும் குரங்குகளாகப் பிறக்க மனவுறுதி கொண்டோமென்று சொல்லிப் போயினர், இதுநிற்க.

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

பிறகு இம்மடந்தையர் அக் கலைக்கோட்டு முனிவரைத் தங்களிடம் மிகவும் ஈடுபடுத்தி அவருடன் கூடவே ஊருக்குத் திரும்பினர். அம்முனிவர் அங்கதேசத்தில் அடிவைத்த வுடனே மிக்க மழைபெய்து பஞ்சம் நீங்கியது. ரோமபாத ராஜனும் அவர்க்குப் பல உபசாரங்களைச் செய்து, தன் மகளான சாந்தையை விதிப்படி விவாஹம் செய்து கொடுத்தனன். அவர் இப்பொழுது அந்நகரில் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிராநின்றார். ஆகையால் நீரே நேரில் சென்று அம்முனிவரை அழைத்துக் கொண்டுவர வேண்டும் என்று ஸுமந்திரர் மொழிந்தனர்.

அதைக் கேட்ட தசரதனும் 'நமது குலத்திற்கு வஸிஷ்டர் புரோஹிதர்; அவரை நீக்கி ருச்யச்ருங்கரைப் புரோஹிதராக விரும்புவது நேர்மையன்று. நாமாகச் செய்யாமல் ஸநத்குமாரர் சொன்ன விருத்தாந்தத்தைப்பற்றி அவரை வரித்தாலும் வஸிஷ்டருக்குத் தெரிவித்து அவரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு செய்வதே நலம்' என்றெண்ணி வஸிஷ்டரிடத்தில் ஸுமந்திரரைக்கொண்டு அக்கதையைச் சொல்லுவித்து அநுமதி பெற்றுக் கொண்டனன். பின்பு ருச்யச்ருங்கரை அழைத்துக்கொண்டு வருவதற்காகத் தனது அந்தப்புரஸ்த்ரீகளுடனும், மந்திரி முதலான பரிவாரங்களுடனுங்கூட அந்த ருச்யச்ருங்கரிருக்கிற ரோமபாத ராஜனுடைய நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றனன்.

பின்பு ரோமபாதனும் தனக்கு நண்பனான தசரதனை வரவேற்று, ரிச்யச்ருங்கரிடத்திலும் சிறப்பாகத் தெரிவித்து அவரைக் கொண்டும் ஸத்காரம் செய்வித்துக் கொண்டிருந்தனன். இப்படித் தசரதன் அங்கு ஏழெட்டு தினங்களிருந்து பின் அவ்வரசனைப் பார்த்து, 'மன்னவ! உன் பெண்ணாகிய சாந்தை பர்த்தாவுடன் எனது பட்டினத்திற்கு வரவேண்டுகிறேன். அவர்களால் நடக்கவேண்டிய காரியமொன்று பெரிதாக நேரிட்டிருக்கின்றது' என்று சொல்ல, அவனும் அப்படியே அங்கீகரித்தனன். பிறகு அரசர்களின் விருப்பத்திற்கிணங்க ருச்யச்ருங்கர் தம் மனைவியுடன் அயோத்திக்குப் புறப்பட்டனர்.

தசரதனும் ரோமபாதனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு, 'அயோத்தி நகரமெங்கும் கொடிகளும் தோரணங்களும் கட்டி அலங்கரிக்கவேண்டும்' என்று நகர

—கம்பராமாயணம்—

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி அரக்கர்களை யழித்தற் பொருட்டுத் தசரத மன்னவனுக்குப் புதல்வனாகப் பிறக்கப் போவதை மனத்திலெண்ணிய வஸிஷ்ட முனிவன், யாகஞ் செய்தால் அந்த வியாஜத்தினால் திருமால் திருவவதரிப்ப னென்ற வுறுதியினால், 'மன்னவா! நீ ஏழேழ் பூதலங்காக்கவல்ல புதல்வரைப் பெறுவிக்கும் வேள்வி யொன்றைச் செய்து முடித்தல் நலம்' என்று அரசனை நோக்கிக் கூறினன். மன்னவன் அது கேட்டு மகிழ்ந்து யாகத்திற்குத் தான் செய்யவேண்டுவதை வினவிநிற்க, அதற்கு முனிவன் கூறுகின்றான்— 'காசியபனுக்குப் புதல்வன், விபண்டகனென்னும் முனிவனுளன், அவனது புத்திரன் ருசியசிருங்கன் (கலைக்கோட்டு முனிவன்) என்று பேர்பெற்றவன். அவன் மனிதர்களையே பாராமல் தபோவனத்திலேயே தன் தந்தைக்குப் பணிவிடை செய்துகொண் டிருந்துவிட்டதனால் நாடு நகரங்களில் வாழ்கின்ற மானிடரை விலங்குகள்போலுமென்று நினைப்பவன், ஸகல சாஸ்திரங்களிலும் வல்லவன், மஹா தபஸ்வி; பிரமருத்திரரும் புகழும் பொறுமை வாய்ந்தவன்; அந்த முனிவன் வந்து யாகத்தை முற்றுவித்தால் நீ கருதியபடி புத்திரர் பிறப்பர்' என்றனர்.

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

மக்களுக்குக் கட்டளையிட்டுத் தூதர்களை அனுப்பினன். பின்பு மன்னவன் அவ்வந்தணரை அழைத்துக்கொண்டு சங்க துந்துபி வாத்யகோஷங்களுடன், நன்ருக அலங்காரஞ் செய்யப் பெற்று விளங்கும் அயோத்திமா நகரத்தினுள் புகுந்தனன். அது கண்டு அந்நகரத்திலுள்ள வர் யாவரும் மகிழ்ச்சி யடைந்தனர். அரசனும் அவ்வந்தணரை அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்று விதிப்படி பூஜைகளைச் செய்து மகிழ்ந்தனன்.

இவ்விதம் ருச்யச்ருங்கரை அழைத்துக்கொண்டு வந்த பின்பு வெகுநாள் சென்ற பிறகு வஸந்தருதுவர, அவ்வரசன் தான் முன்செய்ய உத்தேசித்த யாகத்தை நடத்தவேண்டு மென்று எண்ணங்கொண்டனன். அப்போது அந்த ருச்யச்ருங்கரை அம்மன்னவன் ஸாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுத் தனது வம்சம் விருத்தியாகும்படி ஸந்தான முண்டாகும் பொருட்டு யாகஞ் செய்விக்க வேண்டினன். அவரும் அரசனிடம் ஸத்காரம் பெற்று அப்படியே யென்று ராஜனை நோக்கி யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சித்தப்படுத்தவும் யாகக்குதிரையை விடும்படியாகவும் நியமித்தனர். ராஜனும் சுமந்திரனைப் பார்த்து ஸுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், வஸிஷ்டர், மற்றுமுள்ள பிராமணர்கள் ஆகிய ருத்விக்குகள் யாவரையும் அழைத்துக்கொண்டு வரக் கட்டளையிட்டனன். பிறகு சுமந்திரரும் விரைந்தோடிச் சென்று அவ்வந்தணர்களனைவரையும் அழைத்துக்கொண்டு வந்தனர்.

தசரதன் வந்தவர்களைப் பூஜித்து அவர்களைப் பார்த்து 'யான் புதல்வனில்லாமைபற்றி அசுவமேதயாகஞ் செய்ய விரும்புகின்றேன்; இந்த ருச்யச்ருங்க மாமுனிவரது மகிமையால் எனது இஷ்டங்களெல்லாம் நிறைவேறவேணும்' என்றுரைக்க, பின்பு வஸிஷ்டர் முதலிய அந்தணர் யாவரும் அங்ஙனமே யாகுக வென்று ஆசிகூறினர்.

பின்பு தசரத மன்னவன் மந்திரிகளை நோக்கி யாகத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் விரைவில் சேகரிக்கும்படிக்கும் காக்கவல்லவர்களைக் காவல் வைத்துப் புரோஹிதர்களையும் பின்றெடரச் செய்து குதிரையை விடும்படிக்கும், ஸரயூநதியின் வடகரையில் யாகசாலையை ஏற்படுத்தும்படிக்கும் க்ரமம் தவருமல் விதிப்படியே சாந்தி கருமங்கள் பலவும் நடத்தும்படிக்கும் ப்ரஹ்ம ராக்ஷஸர்கள் இதைக்கெடுக்க வழி தேடவொண்ணுதபடி மிகவும் பாதுகாப்புடன் நடத்தும்படிக்கும் திட்டம் செய்தனன்.

—கம்பராமாயணம்—

அதற்காக நான் செய்யவேண்டுவதைக் கூறவேணுமென்று தசரதனுல் வேண்டப்பட்ட முனிவன் விரிவாகச் சொல்லத் தொடங்கினன் :— ஸ்வாயம்புவ மநுவின் மகன் உத்தானபாதன் ; அவன் மகன் ரோமபாத னென்பான். அவன் அங்க தேசத்திற்கு அரசனுக இருந்தான். அந் நாட்டில் வெகுகாலம் மழையின்மையால் கொடிய பஞ்சத் துயர் மிக்கவளவில் அம்மன்னவன் முனிவர்களை வரவழைத்து தானதருமங்கள் செய்த பின்னரும் மழை பொழியாதாக, பிறகு பெரியோர் பலரை விசாரித்ததில், ரிசியசிருங்க முனிவன் இந்நாட்டில் வந்தால் மழை பெய்யுமென்று அவர்களால் தெரிந்து கொண்டான். அம்முனிவனைத் தனது நாட்டிற்கு அழைத்துவருது எங்ஙனம்? என்று உரோமபாதன் சிந்திக்க, விலைமகளிர் சிலர் தாம் சென்று அழைத்து வருவதாகக் கூற, அப்படியே, அவர்கட்கு அனுமதிதந்தனன். சென்ற அவ்வேசையர் ருசியசிருங்கனது ஆச்ரமத்திற்கு ஒரு யோசனை தூரத்தில் முனிவர்வேடத்துடன் ஒரு பர்ணசாலையை யமைத்துக்கொண்டு அதில் தங்கியிருந்து அக்கலைக்கோட்டு முனிவரது தந்தையான விபண்டக முனிவன் வெளியிற் சென்றிருந்த சமயம் நோக்கி அக்கலைக்கோட்டு முனிவரையணுகினர். அவர் தந்த உபசாரங்களைப் பெற்றுத் தம்மிடமே திரும்பினர்.

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

பின்பு மந்திரிகள் யாவரும் அப்படியே யென்று அக்கட்டளைப்படி யாகத்திற்கு வேண்டிய சடங்குகளை யெல்லாம் முறைப்படி நிறைவேற்றினர்.

இங்ஙனம் யாகஞ் செய்யவேண்டிக் குதிரையைவிட்டு ஓராண்டு நிரம்பி அக்குதிரையும் திரும்பிவர, ஸரயூ நதியின் வடகரையில் மன்னவனது யாகம் நடந்தது. அப்பொழுது பிராமணோத்தமர்கள் யாவரும் கலைக்கோட்டு முனிவரை முன்னிட்டுக் கொண்டு வேள்விச் சடங்குகளைச் செய்தனர். அந்த யாகத்தில் 'பிழை' யென்று சொல்லத் தக்கது ஒன்றும் நேரிடவில்லை. மந்திரத்திலாவது தந்திரத்திலாவது யாதொரு குறையும் விளையவில்லை. அந்த மஹா யாகம் நடந்த நாட்களில் திருப்திபெறாதவர் ஒருவருமில்லை.

அச்வமேதஞ் செய்யவேண்டிய நாட்கள் அநேகங்களாயினும் கல்பஸூத்ரங்களிலும் அதற்கு மூலமான பாகங்களிலும் முக்கியமாக மூன்று தினங்கள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அதில் முதல் நாள் சதுஷ்டோமமென்றும், இரண்டாம் நாள் உக்த்யமென்றும், மூன்றாநாள் அதிராத்ரமென்றும் யாகங்களை நடத்துவதால் அந்தந்த யாகத்தின்பேரால் அந்தந்த தினங்களில் செய்யவேண்டிய செயல்கள் நடந்துவருவதுண்டு. அப்படியே அம்மூன்று தினங்களிலும் அம்மூன்று யாகங்களை நடத்தினர்.

இதர சாஸ்திரங்களில் இவ்வச்வமேதத்திற்கு மற்றுஞ்சில யாகங்களைச் செய்ய வேண்டுமெனச் சொல்லுவதாலே, அவைகளையுங் குறையறச் செய்வித்து நடத்தினர். அவை ஜ்யோதிஷ்டோம மொன்றும் ஆயுஷ்ய மொன்றும் அதிராத்ர மிரண்டும் அபிஜித்தொன்றும் விச்வஜித்தொன்றும் அப்தோர்யாமமென்கிற மஹாயஜ்ஞமொன்றும் ஆக ஏழு யாகங்கள். இப்படி அம்மூன்று தினங்களொழிய மற்றைத் தினங்களில் இந்த யாகங்களை அரசன் செய்வித்தனன்.

அப்பொழுது அம்மன்னவன் யாகத்தைக் காணவந்த அந்தணர்களுக்குப் பொன்னைக் கோடி கோடியாகக் கொடுத்தனன். பின்னும் பேதையாகிய ஓர் அந்தணன் உயர்ந்த நகைகளை வேண்டுமென்று யாசிக்க, அரசன் தன் கைவளையை யீந்தனன். இப்படி மிகுதியாகப் பொன்னும் பொருளும் அளிக்க யாவரும் களித்தனர். அவைகளைப்பெற்ற அந்தணரனைவரும் அவ்வரசனுக்கு விசேஷமாக ஆசீர்வாதஞ் செய்தனர். இங்ஙனம் யாகங்களனைத்திலும் சிறந்ததான அச்வமேதமென்னும் அம்மஹா யாகத்தைக் குறையறச் செய்து முடித்து அம்மன்னவன் மிக்க மனக்களிப்புற்றனன்.

—கம்பராமாயணம்—

மீண்டுசிலதினம் கழிந்தபிறகு கலைக்கோட்டு முனிவனுக்குத் தங்களிடம் விச்வாஸம் மிகும் பொருட்டுப் பலவகைக்கனிகளைக் கொணர்ந்து கொடுத்தனர் அவ்விலைமாதர்கள். இங்ஙனம் பல நாட்கள் கடந்தபின் ஒரு நாள் அம்முனிவரை நோக்கி தேவரீரும் எங்கள் ஆச்ரமத்திற்கு எழுந்தருள வேண்டு மென்று சொல்லி வணங்கி வேண்ட, அதற்கு உடன்பட்டு அவர்களோடு சென்றார் கலைக்கோட்டு முனிவர். அவ்விலைமகளிர் தமது ஆச்சிரமம் மிக அருகிலுள்ளதாகச் சொல்லிக்கொண்டு அம்முனிவருடன் அங்கதேசத்து வழியிற் சென்றார்களாக, அங்கு இம் முனிவரது பாதம்பட்ட மாத்திரத்திலே சள சள வென்று மழை பொழிந்து நீர்நிலைகள் யாவும் நிறைந்து ஆறுகளும் பெருகி யோடின. திடீரென்று இங்ஙனமான விசேஷத்தைக் கண்ட ரோமபாதன், கலைக்கோட்டு முனிவன் வந்தான்

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

பிறகு கலைக்கோட்டுமா முனிவர் "அதர்வணவேதத்தில் சொல்லப்பட்ட மந்திரங்களைக்கொண்டு செய்ய வேண்டிய ஓர் யாகத்தை விதிப்படி செய்யப்போகின்றேன்" என்று தசரதனிடம் சொல்லி அப்படியே அந்த வேள்வியைச் செய்து முடித்தனர். பிறகு தேவதைகளும் கந்தருவர்களும் ஸித்தர்களும் நான்முகக் கடவுளும் மற்றும் மஹரிஷிகளும் அந்த யாகத்தில் தம் தம் ஹவிர்ப்பாகம் வாங்கிக்கொள்வதற்காக ஒன்று கூடிவந்தனர்.

அங்ஙனம் வந்துசேர்ந்த தேவதைகள் யாவரும் அந்த யாகசபையில் பிறர் காணாதபடி யிருந்து பிரமதேவனை நோக்கி 'ஓ பகவானே! உமது அருள்பெற்று மிக்க பராக்ரமங்கொண்ட ராவணனென்னும் ராக்ஷஸன் எங்களனைவரையும் துன்புறுத்திக்கொண்டிருக்கின்றனன். நாங்கள் அவனை அடக்க வல்லமையற்றிருக்கின்றோம். முன்பு நீர் அவனிடமிருந்த ப்ரீதி கொண்டு எங்களால் எவ்விதத்திலும் அவனுக்குச் சாவு உண்டாகாதபடி வரம் கொடுத்தீர். நீர் கொடுத்த வரத்தைப் பாராட்டிக்கொண்டு நாங்களும் அவன் செய்யும் செயல்களை யெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்கின்றோம். அவ்வறிவுகேடன் மூவுலகங்களையும் நடுங்கச் செய்கின்றனன். திக்குப்பாலகர்களையும் பகைக்கின்றனன். தேவர்களுக்கெல்லாம் அரசாகிய இந்திரனையே பட்டத்தினின்றும் தொலைக்க விரும்புகின்றனன். அவன் நீர்கொடுத்த வரத்தினால் மதிமயங்கிக் கொழுத்து ரிஷிகளையும் யக்ஷர்களையும் கந்தர்வர்களையும் அந்தணர்களையும் மதியாமல் வருத்துகின்றனன். அவன் க்ரீடாபர்வதம் முதலிய இடங்களில் திரிந்துகொண்டிருக்கும்பொழுது சுடும்படி சூரியன் வெய்யிற் காயமாட்டான்; அவன் பூந்தோட்டங்களில் விளையாடிக்கொண்டிருக்கையில் 'வேகமாக வீசினால் மேலே புஷ்பங்கள் விழுமோ' வென்று பயந்து காற்றும் வேகமாக வீசுவதில்லை. எப்பொழுதும் வீசுகின்ற அலைகளையுடைய கடலும் அவனைக்கண்டால் கொஞ்சமும் அசையாமலிருக்கின்றது. கர்ப்பங்கலங்கும்படி மிகவும் பயங்கரமாகத்தோன்றுகின்ற அந்த ராக்ஷஸனிடத்தில் எங்களுக்கும் பயம் அதிகமாக உண்டாயிருக்கின்றது. ஆகையால் அவனைக் கொல்லவேண்டிய உபாயத்தை நீர் ஆலோசித்துச் செய்யவேண்டும்' என்று வேண்டினார்கள்.

—கம்பராமாயணம்—

போது மென்று ஆலோசித்து மகிழ்ந்து சேனைகளுடன் அம்முனிவரை எதிர்கொள்ளச்சென்று வணங்கி, விலைமகளிரை நோக்கி 'நீங்கள் என்னுடைய துன்பத்தை உங்கள் உபாயத்தால் தீர்த்து விட்டீர்கள் என்று சொல்லிப் புகழ்ந்தனன். இப்படி நம்மை வஞ்சனையாகவா இவர்கள் இங்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்! என்று சினம் பொங்கிநின்ற முனிவன், மன்னவன் உண்மை யுரைத்துத் தெளிவிக்கத் தெளிந்து, தேரின்மீதேறிக்கொண்டு ரோமபாத மன்னவனது நகர்த்திற்குச் சென்றனன்.

அங்குச் சென்று சிங்காதனத் தமர்ந்து மன்னவனுடைய சாந்தை யென்னும் புதல்வியை மணம் புணர்ந்துகொண்டு அவ்விடத்தே இனிதுறைகின்றான்; அவனை இங்கு அழைத்து வருதல் வேண்டும்'—என்று கூறி முடித்தனன் வசிட்டமுனிவன்.

பிறகு, நானே சென்று அம்முனிவனை யீண்டு அழைத்து வருவேனென்று சொல்லிப் பரிவாரங்களுடன் அங்க நாட்டை நோக்கிப் புறப்பட்ட தசரதன் ரோமபாத மன்னவனால் நன்கு உபசரிக்கப்பெற்றுத் தான் வந்த காரியத்தைச் சொல்ல, அம்மன்னவன் 'நீர் அயோத்தி சென்று சேரும்; நான் முனிவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

அது கேட்ட விஷ்ணு, 'ஓ தேவர்களே! நீங்கள் பயப்படவேண்டாம்: உங்களுக்கு இனிநன்மையுண்டாகும். மிகக்கொடியவனான ராவணனையும் அவன் பிள்ளைகளையும் பேரன்களையும் நண்பர்களையும் மந்திரிகளையும் மரபினர்களையும் மற்றுமுள்ள பந்துக்களையும் அழித்துத் தருமத்தைநிலைநிறுத்தும்பொருட்டு இப்பூமியில் தோன்றி உலகமனைத்தும் பரிபாலனஞ் செய்துகொண்டு பதினோராயிரமாண்டுகள் இருக்கப்போகிறேன்' என்றனன்.

இப்படித் தேவர்களனைவராலும் வேண்டிக்கொள்ளப்பட்டநான்முகனும் சிறிது ஆலோசித்து உடனே ஸந்தோஷமாக "துராத்மாவாகிய அந்த ராவணனைக் கொல்ல உபாயம் யாதெனில், அவன் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் தேவர்களாலும் அஸுரர்களாலும் தனக்கு இறப்பு நேரிடக் கூடாதென்று வரங்கேட்டனன். நானும் அப்படியேயாகட்டுமென்று சொல்லிவிட்டேன். அவ்வரக்கன் அங்ஙனம் வரங்கேட்கும்போது மானிடர்களைப் பற்றிக் கேட்டால் தன்பெருமைக்குக் குறையாகுமென எண்ணி அவர்களால் தனக்கு அழிவு நேரிடக்கூடாதென்று மாத்திரம் கேட்கவில்லை. ஆகையால் மானிடர்களைக் கொண்டே அவனைக் கொல்லவேண்டும். இவனுக்கு வேறு வகையில் அழிவில்லை" என்று மொழிந்தனன். அம்மொழியைக் கேட்டுத் தேவர்களும் முனிவர்களும் மிகுந்த சந்தோஷங்கொண்டனர்.

இங்ஙனமிருக்கும்பொழுது ஸர்வேச்வரனாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு தாம் சிலரை ரக்ஷிக்கும்படியான காலம் வாய்ந்ததே யென்று சந்தோஷத்தினால் சங்குசக்கரம் முதலிய ஆயுதங்களை யேந்திக் கொண்டு பீதாம்பரம் விளங்க அங்கே எழுந்தருளி நான்முகக்கடவுளின் அருகே வந்து நின்றனர். இப்படி எழுந்தருளின ஸர்வேச்வரன் நான்முகனுடன் கலந்து ஆச்ரித ரக்ஷணத்திற்குரிய செயல்களை ஊக்கத்துடன் நினைவிட்டுக்கொண்டிருக்க, தேவர்கள் அனைவரும் எழுந்து பணிந்து பலவகையாகப் புகழ்ந்து 'ஓ மஹாவிஷ்ணுவே! நீர் உலகங்களுக்கு நன்மை செய்யும்பொருட்டுத் தாமாகவே முன்வருந் தன்மையர். அப்படிப்பட்ட உம்மை நாங்கள் உலகைப் பாதுகாப்பான் பொருட்டுத் தூண்டவேண்டியதுமுண்டோ? அதோ யாகம் செய்துகொண்டிருக்கும் தசரத மஹாராஜனது மனைவிகள் மூவரிடத்திலும் நீர் உம்மை நான்கு வகையாகப் பிரித்துக்கொண்டு நாலு பிள்ளைகளாகப் பிறந்து ராவணனை யுத்தத்தில் முடிக்கவேண்டும். இதற்காக யக்ஷகந்தர்வஸித்தர்களும் முனிவர்களும் மற்றுமுள்ள தேவர்களுமாகிய நாங்கள் அனைவரும் உம்மையே சரணம் புகுகின்றனம்' என்றனர்.

—கம்பராமாயணம்—

சொல்லி மரியாதைகளுடன் தயரதனை அயோத்திக்கு அனுப்பிவிட்டு, பிறகு, முனிவன் திருவடிகளிலே விழுந்து வணங்கித் தசரத சக்ரவர்த்தியின் மநோரதத்தை நிறைவேற்றியருள வேணுமென்று வேண்டி, அதற்கிசைந்த அவருடன் தானும் அயோத்தி சேர, அங்கு அனைவரும் பரமானந்தமெய்தினர்.

பிறகு கலைக்கோட்டு முனிவன் தன்னை வரவழைத்த காரணத்தைத் தெரிந்துகொண்டு வேள்வி செய்விக்கச் சன்னத்தனாயினன். வேள்விக்கு வேண்டிய யாவும் சித்தமாக, தசரதன் யாக தீக்ஷை பெற்றனன். ஒரு வருஷகாலம் அசுவமேதயாகம் நடந்தது. ருச்யசிருங்க முனிவன் அந்த யாககுண்டத்தில் புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்தனன். அப்போது செம்பட்ட மயிரையும் செந்நிறக் கண்களையுமுடைய பூதமொன்று பொன்தட்டின்

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

இப்படி அம்மஹாநுபாவன் தேவர்களுக்கு வரங்கொடுத்து அவர்கள் வேண்டிக் கொண்டபடி நிலவுலகத்தில் தான் வந்து பிறக்கக் கருதித் தசரத மஹாராஜனைத் தகப்பனாக விரும்பி மறைந்தனன். பிறகு தசரதமன்னவன் புத்திரகாமேஷ்டியென்னும் யாகத்தைத் தொடங்கிச் செய்தனன். அந்த யாகத்தில் ஆஹவநீயாக்நி குண்டத்தினின்று பெரும் பூதமொன்று மிகுந்த ஒளி பொருந்தி வெளியே கிளம்பிற்று. அது மிகுந்த திறமையும், சிறந்த வலிவும் பெற்று, கறுப்புஞ் சிவப்புங் கலந்த ஆடைகளணிந்து, சிவந்த முகத்துடன் தென்பட்டது. மேலும் அது துந்துபி வாத்யம் போன்ற வொலியை யொலித்து, உடம்பிலும் தலையிலும் மீசையிலும் சிங்கத்தின் மயிர்போல் நிகுநிகென்று நெருங்கி விளங்குகிற மயிர்கள் அமையப்பெற்று, சுபலக்ஷணங்களனைத்தும் பொருந்தியிருந்தது.

அது உயர்ந்த ஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பெற்றுப் பர்வத சிகரம்போல் உயர்ந்து, கொழுத்த புலிபோன்ற உடல்வலியுடையதாகி ஸூர்யனையொத்த உருவங்கொண்டு கொழுந்துவிட்டெரியும் அக்கினிஜ்வாலையை நிகர்த்து மிகவும் அற்புதமாக விளங்கிற்று.

இஃதன்றியும் வெள்ளியினால் செய்தமூடியிடப் பெற்றுப் பொன்னாலமைக்கப்பெற்ற பாத்திரத்தில் திவ்ய பாயஸத்தை நிரப்பி இரண்டு கைகளாலும் அணைத்துக்கொண்டு மேற்கிளம்பித் தசரதனைப் பார்த்து ‘அரசனே! நான் பிரமனிடமிருந்து வந்தவனெனத் தெரிந்து கொள்’ என்றது.

அப்பொழுது அம்மன்னவன் கையைக் கூப்பிக்கொண்டு ‘பகவானே! உனக்கு நல்வரவு உண்டாகவேண்டும்; நான் உனக்குச் செய்யவேண்டியதை அருளிச்செய்தருள்க’ என்றனன். பிறகு அந்த ப்ராஜாபத்ய புருஷன் மீளவும் அரசனைப் பார்த்து, ‘ராஜனே! நீ அசுவமேதஞ் செய்தும் புத்திரகாமேஷ்டி செய்தும் தேவர்களை ஆராதித்தனையாகையால் உனக்கு இப்பொழுது இந்தப் பாயஸம் கிடைத்தது. மஹாராஜனே! இப்பாயஸம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவால் நிருமிக்கப்பட்டது. விரைவில் ஸந்தானத்தை யுண்டுபண்ண வல்லது. இதைக் கைப்பற்றிப் பத்தினிகளுக்குக் கொடுத்து உண்ணச்சொல்; பிறகு புத்திரர்களைப் பெறுவாய்’ என்று சொல்லிற்று.

—கம்பராமாயணம்—

மீது அமிர்த பிண்டத்தைத் தாங்கிக்கொண்டு ஹோமாக்நியில் நின்றும் விரைந்தெழுந்து வந்து அந்த அமுதத்தட்டைத் தரையிலே வைத்து விட்டு வந்த வழியே மீள, ருச்யசிருங்கன் முறைப்படி அந்தச் சுதையைப் பட்டமஹிஷியர்க்குத் தரும்படி தசரதனிடம் கூறினான். அக்கட்டளையின்படியே மன்னவன் கௌசலைக்கும், கைகேயிக்கும், சுமித்திரைக்கும் முறையே சுதையை யளித்து பின்னும் எஞ்சியதைச் சுமித்திரைக்கு அளித்தனன். முனிவன் யாக ஹோமம் முடித்ததும் யஜமாநனாயிருந்த தசரதன் யாகசாலையை விட்டுப்புறப்பட்டு பூர்ணாஹுதிக்கு அங்கமாகப் பூரிகொடுத்தற் பொருட்டு ஓலக்கமண்டபத்தை யடைந்தனன். அந்தணர்க்குத் தக்ஷிணை கொடுத்து அவபிரதஸ்நாநஞ் செய்து ராஜ ஸபையை யடைந்து வஸிஷ்டரையும் ரிச்யச்ருங்க முனிவரையும் வணங்க, அவரவர்கள் மன்னவனை ஆசீர்வதித்துத் தம்தம் இருப்பிடமேகினர். பிறகு சக்ரவர்த்தியின் தேவியர் மூவரும் கருத்தரித்து நாளடைவில் ப்ரஸவித்தனர்.

http://acharya.org

—வால்மீகிராமாயணம்—

அரசனும் மனக்களிப்புற்று, தேவ பாயஸம் நிறைந்த அந்தப் பொன் பாத்திரத்தைத் தலையால் வாங்கிக்கொண்டு அப்பூதத்தை வணங்கி மிகுந்த சந்தோஷத்துடன் அதை வலம் வந்து பூஜித்தனன். உடனே அப்பூதம் தான் வந்த காரியத்தை நிறைவேற்றி அந்த அக்கினியிலேயே மறைந்துவிட்டது.

அரசனும் அரண்மனைக்குட் சென்று கௌஸல்யையை நோக்கி ‘இப்பாயஸத்தைப் பெற்றுக்கொள்’ என்றுரைத்து அப்பாயஸத்தில் பாதியைக் கௌஸல்யைக்குத் தந்தனன். மிகுந்த பாதியிலும் பாதியைச் சுமித்திரைக்குத் தந்தனன். சுமித்திரைக்குத் தந்து மிகுந்ததிற் பாதியைக் கைகேயிக்கு ஈந்தனன். நின்ற பாகத்தை மறுபடியும் சுமித்திரைக்குக் கொடுத்தனன். இங்ஙனம் அரசன் பாயஸத்தை வெவ்வேறாகப் பங்கிட்டுக் கொடுக்க, மனைவிகள் மூவரும் அதை வாங்கிக்கொண்டு மிகுந்த மனக் களிப்புடன் உண்டு, சில காலஞ் சென்ற பின்பு கருவுற்றனர். பிறகு அம்மன்னவன் தனது பத்தினிகள் கர்ப்பம் நிறைந்து விளங்குவதைக் கண்டு மனக்கவலை தீர்ந்து மனமகிழ்ந்தவனாகி வீற்றிருந்தனன்.

ஸ்ரீ மஹாவிஷ்ணு அம் மஹாராஜனுக்குப் பிள்ளையாக அவதரிக்க உத்தேசித்திருக்கையில் பிரமதேவன் தேவர்களனைவரையும் நோக்கி “தேவர்களே! ஸ்ரீ மஹாவிஷ்ணு தான் மொழிந்த மொழி தவறாமல் மானிடனாக அவதாரஞ் செய்து ராவணனை அழிக்கப் போகின்றனன். ஆகையால் அத் திருமாலுக்குப் படைகளாகி உதவியாயிருக்கத்தக்க மிகுந்த பலமுடையவர்களும், ராக்ஷஸர்களோடு போர்புரியவல்ல காமரூபங் கொள்ளத் தகுந்தவர்களுமாயிருப்பவர்களை நீங்கள் படைக்கவேண்டும். அப்ஸரஸ் ஸ்த்ரீகளிடத்திலும், கந்தர்வ யக்ஷ பன்னக ருக்ஷ வித்யாதர கின்னரஸ்த்ரீகளிடத்திலும், வானரஸ்த்ரீகளிடத்திலும், வானரவுருவங்கொண்டு உங்களோடொத்த பராக்கிரமமுடைய புதல்வர்களை நீங்கள் படைக்கவேண்டும். முன்னமே நான் கரடிகளுக்குத் தலைவனாகிய ஜாம்பவானென்பவனைப் படைத்திருக்கின்றேன். நான் கொட்டாவி விடும்போது உடனே என் வாயிலிருந்து அவன் விரைவிற் பிறந்தனன்” என்றுரைக்க, அது கேட்ட தேவர்களும் அவனது கட்டளையை ஏற்று வானர வுருவங்கொண்ட புதல்வர்களைப் பிறப்பித்தனர். ரிஷிகளும் சித்தர்களும் வித்யாதரர்களும் உரகர்களும் சாரணர்களும் மஹா வீரர்களான வானர குமாரர்களைப் பெற்றனர்.

இந்திரன் வாலியையும், சூரியன் சுக்ரீவனையும், ப்ருஹஸ்பதி தாரனையும், குபேரன் கந்தமாதனையும், அக்னி நீலனையும், அசுவினிதேவதைகளிருவரும் மைந்த த்விவிதர்களையும்,

—கம்ப ராமாயணம்—

கௌஸல்யா தேவி புனர்பூசத்தில் கர்க்கட லக்கினத்தில் ஸகல லோகநாதனான திருமாலைப் புதல்வனாகப் பெற்றனள். கைகேயி பூசத்தில் மீன லக்னத்தில் ஒரு புதல்வனைப் பெற்றனள். சுமித்திரை ஆயில்ய நக்ஷத்திரத்தில் கர்க்கடலக்னத்தில் ஒரு புதல்வனையும், மகா நக்ஷத்திரத்தில் சிங்கராசியில் மீண்டும் ஒரு புதல்வனையும் பெற்றனள். உடனே அவர்களது தோழிமார்கள் அரசனிடம் விரைந்து சென்று புத்திரர் பிறந்த ஸந்தோஷ ஸமாசாரத்தைச் சொல்லி ஆனந்தக் கூத்தாடி நிற்க, அரசனும் உவந்து சோதிடம் வல்லாரை வருவிக்க, வந்த அவர்கள் பிறந்தநாள் தத்காலகிரகம் முதலியவற்றை யாராய்ந்து ‘உலகுகட்கு நேர்ந்துள்ள வருத்தம் யாவும் இப்புதல்வர்களால் நீங்கும்’ என்று பாராட்டிக் கூறி எல்லாப் புதல்வர்கட்கும் ஜாதகமெழுதித்தந்தனர். தந்தை முறைப்படி ஸரயூ நதியில் தீர்த்தமாடித் தானதருமங்களைச் சிறப்பாகச் செய்தனன். சிறைப்பட்ட அரசரை விடுவிக்கு

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

வருணன் ஸுஷேணனையும், பர்ஜந்யன் சரபனையும், வாயு ஹநுமானையும் பெற்றனர். இவ் வானரர்களேயன்றி மேலும் அளவிடவொண்ணாத விக்ரமமுடைய வானரர்கள் அநேகமாயிரவர் படைக்கப்பட்டனர். இங்ஙனம் காமரூபிகளும் மஹா தீரர்களுமாகிய வானர சேனாதிபதிகள் நூறு லக்ஷம்பேர் பிறந்தனர்.

மிகுந்த பராக்ரமமுடையவனான வாலி தனது புஜபலத்தினால் கரடிகளும் முசுக்களும் குரங்குகளுமாகிய அவ்வீரர்களனைவரையும் பரிபாலித்து வந்தனன். மேலும் அவர்கள் பலவிதமான உருவங்களும் வேறுவேறான அடையாளங்களு முள்ளவர்களாகி இப்பூமியிலுள்ள மலைகளிலும் கானகங்களிலும் கடல் தீவுகளிலும் பரந்து நிறைந்திருந்து இராமனுக்குத் துணைபுரிவதற்காக ஸமயம் எதிர்பார்த்திருந்தனர்.

தசரத மகாராஜனுடைய அசுவமேதயாகம் புத்ரகாமேஷ்டியுடன்கூட நடந்து நிறைவேறியபின் தேவர்களும் மறைமுகமாகத் தமது ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுத் திரும்பினர். யாகத்திற்கு வந்த மன்னவர்கள் யாவரும் தக்கபடி உபசரிக்கப்பெற்று மகிழ்ந்து தம்தம் நாட்டையடைந்தனர். பிறகு தசரதனும் அந்தணர்களை உடன்கொண்டு அயோத்தியுள் பிரவேசித்தனன். பின்பு கலைக்கோட்டு முனிவரும் பரிவாரங்களுடன் தமது இல்லமேகினர்.

ஓராண்டு சென்றபின், கௌஸல்யா தேவி பாயஸம் புசித்தது முதலாகப் பன்னிரண்டாவது மாதமாகிய சித்திரை மாதத்தில், நவமி திதியினன்று புனர்வஸு நக்ஷத்திரத்தில், சூரியன் அங்காரகன் சனி ப்ருஹஸ்பதி சுக்கிரன் ஆகிய இவ்வைவரும் தந்தம்முடைய உச்சஸ்தானங்களாகிய மேஷ மகர துலா கர்க்கடக மீனங்களில் இருக்கையில், அதில் ப்ருஹஸ்பதி சந்திரனோடு கலந்திருக்க, கர்க்கடக லக்கினத்தில், எல்லா சுபலக்ஷணங்களும் பொருந்திய ஒரு புதல்வனைப் பெற்றனள். கைகேயி பின்பு புஷ்ய நக்ஷத்திரத்தில் மீன லக்கினத்தில் ஒரு புதல்வனைப் பெற்றனள். பின்பு ஸுமித்ராதேவி ஆச்லேஷா நக்ஷத்திரத்தில் கர்க்கடக லக்கினத்தில் இரண்டு புத்திரர்களை யீன்றனள்.

அச்சமயத்தில் கந்தர்வர்கள் ஆகாயத்தில் மிக மதுரமாகப் பாடினர். அப்ஸரஸ்திரீகளும் கூட்டங்கூடி ஆட்டமாடினர். தேவர்களும் துந்துபி வாத்யங்களைக் கணகண வென்று முழக்கினர். பின்னும் ஆகாயத்தினின்று பூமழை பெய்வித்தனர். அயோத்தியிலும் ஜனங்கள் யாவரும் விரைந்து மஹோத்ஸவங் கொண்டாடினர். அரசனும் பலர்க்குப் பலவகையான பரிசுகளை வழங்கினன்.

—கம்ப ராமாயணம்—

மாறும் அந்தணர்கள் விரதங்களைக் குறைவில்லாமல் நடத்தவும் ஆங்காங்குக் கோவில்களைச் செப்பனிடவும் திருவாராதனைமுறைகளைச் சிறப்பிக்கவும் விசேஷமான திருவிழாக்களை நடத்தவும் அந்தணர்கட்கு க்ராமபூமிகள் தானஞ் செய்யவுங் கட்டளையிட்டு, அவரவர்கள் செலுத்த வேண்டிய கப்பங்களை ஏழு வருஷம் தவிர்க வென்றும், பொக்கிஷ சாலையைத் திறந்துவிட்டு ஏழைகட்கு ஈந்திடுக வென்றும் பறையறைவிக்கத் தெரிவித்தனன். அப்படியே வள்ளுவர் பறையறைந்து செய்தி தெரிவிக்க நகரத்து மாந்தரெல்லாம் மகிழ்ந்தனர்.

பிறகு வசிட்டமுனிவன், புதல்வர் நால்வர்க்கும் முறையே இராம னென்றும் பரத னென்றும் லக்ஷ்மண னென்றும் சத்ருக்ந னென்றும் திருநாமம் சாத்தினன். அப்போது அரசன் அளவிறந்த செல்வங்களால் அந்தணர்களை யுகப்பித்தனன். இராமனிடத்திலேயே

http://acharya.org

—வால்மீகி ராமாயணம்—

பின்பு பதின்மூன்ருவது நாளில் மன்னவன் புதல்வர்களுக்கு நாமகரணஞ் செய்யத் தொடங்கி, வஸிஷ்ட முனிவரைக்கொண்டு மூத்த குமாரனுக்கு ராமனென்றும், கைகேயியின் புதல்வனுக்குப் பரதனென்றும், ஸுமித்ரா தேவியின் புதல்வர்களில் ஒருவனுக்கு லக்ஷ்மணனென்றும், மற்ருெருவனுக்கு சத்ருக்னனென்றும் நாமங்களை யிடுவித்தனன். நாடுநகரங்களிலுள்ள அந்தணர்களனைவர்க்கும் உணவளித்துப் பொன்னையும் ரத்நங்களையும் அநேகமாகக் கொடுத்தனன். பின்பு புதல்வர்களுக்கு ஜாத கருமம் முதலிய சடங்குகளனைத்தும் அடைவே செய்வித்தனன்.

அக்குமாரர்கள் நால்வரும் நாளடைவில் வேதசாஸ்திரங்களைக்கற்று தனுர்வேதத்திலும் வல்லமைபெற்று, சூரத்தன்மை பொருந்தி, உலகங்கட்கு நன்மையைச் செய்வதில் விருப்பங்கொண்டு, நற்குணங்களனைத்தும் நிறைந்து விளங்கினர்.

அவர்களில் ராமன் பிதாவினது சுச்ரூஷையில் மிக்க விருப்பங்கொண்டு விளங்கினன். லக்ஷ்மணன் ராமனுக்குப் பணிவிடை செய்வதான செல்வத்தை மேன்மேலும் பெருகச் செய்து கொண்டிருந்தனன். ஸ்ரீராமன் லக்ஷ்மணனை விட்டு ஒரு நொடியும் பிரியான். எப்படிப்பட்ட வுணவுகிடைத்தாலும் ஸ்ரீராகவன் லக்ஷ்மணனை நீக்கித் தனியே புசியான். எந்த நிலைமையிலும் லக்ஷ்மணன் இராமனையே யநுவர்த்தித் திருப்பான். சத்துருக்கனன் பரதனையே அநுவர்த்தித் திருப்பான்.

இங்ஙனம் புதல்வர் நால்வரோடுங்கூடித் தசரதன் பரமானந்த வமுதக்கடலில் ஆழ்ந்திருந்தனன்.

---

வால்மீகிராமாயணத்தில் ராமாவதார கெட்டம் முற்றிற்று.

[பதினெட்டாவது ஸர்க்கத்தில் பாதிபாகமாயிற்று.]

---

—கம்ப ராமாயணம்—

தயரதன் பேரன்பு பூண்டிருந்தனன். சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல் குறையற வளர்ந்து செல்லும் இக்குமாரர்கட்குக் கால காலத்தில் சவுளமும் உபநயனமும் விதி முறை நடத்தியபின் அவர்கட்கு வசிட்டமுனிவன் பல கலைகளையும் பயில்வித்தனன். ஸ்ரீராம லக்ஷ்மணர்களும், பரத சத்ருக்நர்களும் ஒருவரையொருவர் பிரியாது பேரன்புடையராயிருந்தனர். இராமபிரான் தனது நற்குண நற்செய்கைகளினுல் எல்லாருடைய மனத்தையுங் கவர்ந்துகொண்டு இனிது வாழ்ந்தனன். தசரத சக்ரவர்த்தியோ ஒப்பற்ற ஆனந்தக் கடலில் மூழ்கி வாழ்கின்ருன்.

கம்பராமாயணத்தில் ராமாவதார கெட்டம் முற்றிற்று.

(திருவவதாரப் படலம் முடிந்தது.)

---

http://acharya.org

## கதை வேற்றுமைக் குறிப்பு.

கீழ்க்குறித்த ராமாவதார கெட்டத்தில் வால்மீகி ராமாயணத்திற்கும் கம்ப ராமாயணத்திற்குமுள்ள கதை வேற்றுமைகளில் சில ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றன ;—

(1) தசரத சக்ரவர்த்தி மகப்பேறில்லாக் குறையை நீக்கிக்கொள்ளுதற்காக அச்வமேதயாகஞ் செய்வதென்று வஸிஷ்டாதிகளோடு ஆலோசித்து நிச்சயித்தான பின்பு, சுமந்திரர் ஏகாந்தத்தில் சக்ரவர்த்தியைச் சார்ந்து 'ஸநத்குமாரர், கலைக்கோட்டு முனிவனைக் கொண்டு யாகஞ் செய்யத் தசரதற்குப் புத்ரலாப முண்டாகுமென்று ருஷிகளின் முன்னிலையில் முன்பு சொல்லி யுள்ளார்' என்று தெரிவிக்க, பின்பு தசரதன் சுமந்திரரைக் கொண்டு வஸிஷ்டமஹர்ஷியினிடத்து அந்தச் செய்தியை யறிவித்து அவருடைய அனுமதியின்மேல் அந்த ருச்யச்ருங்க முனிவரை யழைத்து வந்ததாக வான்மீகம் கூறியுள்ளது.

கம்பர் கூறுவதோ வென்னில் ; ருச்யச்ருங்கருடைய வ்ருத்தாந்தங்களைத் தசரதற்கு வஸிஷ்ட மஹர்ஷியே கூறி அவரை யழைத்துக் கொண்டுவர நியமித்ததாக.

(2) தசரத சக்ரவர்த்தி அச்வமேதயாகம் நடத்துகையில் அங்கு ஹவிர்ப்பாகம் பெற வந்த தேவர்கள் யாவரும் கூடியகாலத்து அச்சபையில் அமரர்கள் நான்முகனை நோக்கித் தங்கள் குறையைத் தெரிவிக்க, நான்முகன் மானிடரைக் கொண்டே இராவணனைக் கொல்ல வேணுமென்று நிச்சயிக்கையில், திருமால் தனது ரக்ஷணத் தொழிலுக்கு நல்ல ஸமயம் வாய்த்த தென்று மகிழ்ந்து அங்குத் தோன்றினனென்றும் மேல்வருமவை அங்கு நிகழ்ந்தன வென்றும் வான்மீகம் கூறியுள்ளது.

கம்பர் கூறுவதோ வென்னில், அச்வமேத யாகமுயற்சிக்கு முன்னமே புத்திரனில்லாக் குறையைத் தசரதன் வெளியிட்டபோதே வசிட்ட முனிவன், தேவர்கள் முன்னமே திருமாலிடம் தங்கள் குறையை முறையிட்டதாகவும் அப்போது திருமால் அவர்கட்கு அபயமளித்துத் தான் தசரதாத்மஜனாக அவதரிக்கப் போவதைக் கூறினதாகவும் அதை அவர் தசரதற்குச் சொல்லுவதாகவு முள்ளது.

(3) தேவர்களைப் பூமியில் வானர வீரர்களாகப் பிறக்குமாறு பிரமன் கட்டளையிட்டதாகவும், அதுவும் தசரத திவ்ய மஹிஷிகள் கருக்கொண்டபின்பு திருமால் அவர்களுடைய கர்ப்பத்திலே தோன்றுவதாகத் திருவுள்ளம் பற்றியதைப் பிரமன்தான் அறிந்த பிறகென்றும் வான்மீகம் கூறுகின்றது.

கம்பரோவென்னில்; தேவர்கள் திருமாலினிடம் தங்கள் குறைகளை முறையிட்டவப்போதே திருமால்தானே இங்ஙனம் கட்டளையிட்டதாகக் கூறுகின்றார்.

(4) யாககுண்டத்தினின்று பூதமொன்று எழுந்த கதையைக் கூறுமிடத்து, வெள்ளிமூடியை யுடையதும் திவ்யபாயஸத்தால் நிறைந்ததுமான ஸ்வர்ணபாத்திரத்தைக் கொணர்ந்து கொடுத்ததாகவும், அந்தப் பூதமே தேவியர்க்கு அந்தப் பாயஸத்தைக் கொடுக்கும்படி கூறியதாகவும் வான்மீகத்திலுள்ளது.

கம்பரோவெனில், பூதம் அமிர்தபிண்டத்தைத் தட்டிலேந்திக்கொண்டு வந்ததாகவும் அந்தத் தட்டைத் தரையிலே வைத்துவிட்டுச் சென்றதாகவும் ருச்யசிருங்கமுனிவர் அந்தச் சுதையைத் தேவியர்க்கு முறைப்படி தருமாறு தயரதற்குக் கூறினதாகவும் கூறியுள்ளார்.

(5) அந்தச்சுதையை மன்னவன் மனைவியர்க்கு வழங்கினவாற்றைக் கூறுமிடத்திலும் இருவர் கூற்றிலும் வேற்றுமையுள்ளது.

இங்ஙனமுள்ள வேற்றுமைகளை உய்த்துணர்க.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை யடியொற்றியே தாம் இராமாயணமியற்றுவதாக அடியில் கூறி யெழுந்த கம்பர் இங்ஙனம் பலவாறு கதை வேற்றுமைபடப் பாடினதன் காரணத்தை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

---

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

# நம்மாழ்வார் எம்பெருமானுர் மணவாளமாமுனிகள் விஷயமாக நித்யாநுஸந்தேயமாய் முன்னேர்கள் பணித்தருளின சிறிய ஸ்தோத்ரங்கள் உரையுடன் வெளியிடப்படுகின்றன.

## 1. நம்மாழ்வார் விஷயமான ஸ்துதிகள்.

# பராங்குசாஷ்டகம்.

கூரத்தாழ்வான் முதலான பூருவாசாரியர்கள் பலர் ஆழ்வார் விஷயமாகப் பணித்தருளின ச்லோகங்களில் எட்டுச்லோக ரத்னங்களைத் திரட்டி பராங்குசாஷ்டக மென்று பெயரிட்டு நித்யாநு ஸந்தேயமாக நியமித்தருளினர் முன்னேர். நாடோறும் திருவாராதந ஸமாப்தியில் திருமாளிகைதோறும் இது அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. இதில், *த்ரைவித்ய வ்ருத்த, *பக்திப்ரபாவ* என்னுமிரண்டு ச்லோகங்கள் கூரத்தாழ்வானுடைய ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தின் தொடக்கத்திலுள்ளவை. *ருஷிம் ஜுஷாமஹே* என்கிற ச்லோகம் பட்டருடைய ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலுள்ளது. * யத்கோஸஹஸ்ரம் * பத்யு: ச்ரிய: * சடகோப முநிம் * வகுளாபரணம் * என்கிற நான்கு ச்லோகங்கள் பூருவர்களினுடைய முக்தகங்கள். * நமஜ்ஜநஸ்ய * என்னும் ச்லோகம் ஜீயர் நாயனுர் அருளிச்செய்த நக்ஷத்ரமாலிகையிலுள்ளது. ஆக இந்த எட்டுச்லோகங்களும் பராங்குசாஷ்டக மென்று போற்றப்படுவது.

### முதல் ச்லோகம்.

त्रैविद्यवृद्धजनमूर्धविभूषणं यत् संपच्च सात्त्विकजनस्य यदेव नित्यम् ।
यद्वा शरण्यमशरण्यजनस्य पुण्यं तत्संश्रयेम वकुलाभरणांघ्रियुग्मम् ॥ १ ॥

த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்தவிபூஷணம் யத் ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய யதேவ நித்யம்,
யத் வா சரண்யமசரண்யஜநஸ்ய புண்யம் தத் ஸம்ச்ரயேம வகுளாபரணங்க்ரியுக்மம்.

**யத் த்ரைவித்ய வ்ருத்தஜந மூர்த்தவிபூஷணம், யதேவ நித்யம் ஸாத்விக ஜநஸ்ய ஸம்பத் ச, யத் வா அசரண்யஜநஸ்ய சரண்யம், தத் புண்யம் வகுளாபரண அங்க்ரியுக்மம் ஸம்ச்ரயேம.**

யாதொரு நம்மாழ்வார் திருவடியிணையானது பரம வைதிகர்களுடைய முடிக்கு அலங்காரமாயிருக்கின்றதோ, யாதொரு திருவடியிணையே ஸர்வ காலமும் ஸாத்விகர்களுக்கு ஸகலைச்வர்யமுமாக இருக்கின்றதோ, யாதொரு திருவடியிணையே புகலொன்றில்லாதவர்களுக்குத் தஞ்சமாயிருக்கின்றதோ, அப்படிப்பட்ட பரமபாவனமான நம்மாழ்வாரது திருவடியிணையை ஆச்ரயிக்கக் கடவோம்.

* * * ஆளவந்தார் * மாதா பிதா யுவதய: * என்கிற ச்லோகத்தில் நம்மாழ்வாருடைய திருவடிகளைத்தமக்கு ஸர்வஸ்வமாகத் துதித்து அத்திருவடிகளையே * ப்ரணமாமி மூர்த்நா * என்று தலையால் வணங்குவதாக அருளிச்செய்தபடியால் அதைத் திருவுள்ளம்பற்றி முதல்பாதமருளிச்செய்தது. * தனத்தாலு மேதுங்குறைவிலேன் எந்தைசடகோபன் பாதங்கள் யாமுடைய பற்று * என்றதை நோக்கி இரண்டாவது பாதம்பணித்தது. * ஸர்வலோக சரண்யனை எம்பெருமானுலும் கைவிடப்பட்டவர்களுக்கு ஆழ்வார்திருவடிகளே தஞ்சமென்கிறது மூன்றுவது பாதம். இந்த ச்லோகமும் அடுத்த ச்லோகமும் ஸ்ரீவை



http://acharya.org

குண்டஸ்தவத்தின் முதலிரண்டு ச்லோகங்களாதலால் அந்த ஸ்தவவியாக்கியானத்தில் நமது விபுலமானவுரை காணத்தக்கது. ... ... (1)

भक्तिप्रभावभवदद्भुतभावबन्धसन्धुक्षितप्रणयसाररसौघपूर्णः ।
वेदार्थरत्ननिधिरच्युतदिव्यधाम जीयात्पराङ्कुशपयोधिरसीमभूमा ॥२॥

பக்திப்ரபாவபவதத்புதபாவபந்த ஸந்துக்ஷிதப்ரணயஸாரரஸௌகபூர்ண:,
வேதார்த்தரத்நநிதிரச்யுததிவ்யதாம ஜீயாத் பராங்குசபயோதிரஸீமபூமா. (2)

**பக்திப்ரபாவ பவத் அத்புத பாவபந்த ஸந்துக்ஷித ப்ரணயஸார ரஸௌக பூர்ண:, வேதார்த்த ரத்ந நிதி:, அச்யுத திவ்ய தாம, அஸீமபூமா, பராங்குச பயோதி: ஜீயாத்.** பக்தியின் கனத்தாலுண்டாகிய ஆச்சரியமான அபிப்ராய விசேஷங்களினால் வளர்க்கப்பட்ட சிறந்த ப்ரணயமாகிற தீர்த்த ப்ரவாஹத்தாலே [நவரஸ ஸமூஹத்தாலே] நிறைந்ததாயும், வேதப்பொருளாகிற நவரத்னங்களுக்கு நிதியாயும், எம்பெருமானுக்கு திவ்யமான ஸ்தானமாயும் அளவில்லாத பெருமையையுடையதாயுமிருக்கிற நம்மாழ்வாராகிற கடல் நெடுநாள் வாழவேணும்.

* பக்தாம்ருதம் * என்கிற தனியனில் * நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம் * என்று திருவாய்மொழியைக் கடலாகக் கூறினர் முன்னோர். இங்கு ஆழ்வார்தம்மையே கடலாகக் கூறுகிறது. அங்ஙனம் கூறுவதற்குள்ள உபபத்திகள் நான்குவிசேஷணங்களினால் மூதலிக்கப்படுகின்றன. * நதீநாம் ஸாகரோ கதி : * என்கிறபடியே பலநதிகளும்வந்து தன்னிடத்தே சேர்வதனால் பலவகைப்பட்ட ரஸங்களினால் நிரம்பியிருக்கும்கடல். ஆழ்வாரோவென்னில், பக்தியின் கனத்தினால் தோன்றிய அற்புதமான அபிப்ராயவிசேஷங்கள் கொண்டு பலபலபடியாகப் பேசும்முகத்தால் நவரஸங்களும் பொதிந்திருப்பர். [அந்த நவரஸபூர்த்தியை திருவிருத்தம் முதலான ஸ்ரீஸூக்திகள் காட்டும்.] கடல் ரத்நாகரம்; ஆழ்வார் வேதப்பொருள்களாகிற ரத்னங்களுக்குப் பிறப்பிடம். கடல் எம்பெருமானுறையுமிடம். ஆழ்வாரும் * ஒண்சங்கதைவாளாழியானொருவனடியேனுள்ளானே * என்கிறபடியே தம்முள்எம்பெருமானைத் தாங்கி நிற்பவர். கடல் அளவுகடந்த பெருமையையுடையது; அது ஆகார வைபுல்யம். ஆழ்வார் அளவிறந்த குணங்களினால் பெருமைவாய்ந்தவர். ஆகஇப்படிகளாலே கடலென்னத் தகுந்த ஆழ்வார் வாழ்க. ... ... ... (2)

ऋषिं जुषामहे कृष्णतृष्णातत्त्वमिवोदितम् ।
सहस्रशाखां योऽद्राक्षीद् द्राविडीं ब्रह्मसंहिताम् ॥३॥

ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்த்வமிவோதிதம்.
ஸஹஸ்ரசாகாம் யோத்ராக்ஷீத் த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம். (3)

**ய: ஸஹஸ்ரசாகாம் த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம் அத்ராக்ஷீத், க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வமிவ உதிதம் தம் ரிஷிம் ஜுஷாமஹே.** யாவரொருமுனிவர் ஆயிரம் பாசுரங்களையுடையதான த்ராவிடப்ரஹ்ம ஸம்ஹிதையை ஸாக்ஷாத்கரித்தாரோ, க்ருஷ்ணபக்தியே வடிவெடுத்து அவதரித்ததென்னலாம்படியான அந்த சடகோப முனிவரை ஸேவிக்கிறோம்.

* ஸாமவேதத்திற்கு ஸஹஸ்ரசாகைகள் உள்ளனவாக ப்ரஸித்தி; அப்படியே ஆயிரம் சாகைகளென்னலாம்படியான ஆயிரம் பாசுரங்களையுடைய்து ஸாமவேதஸாரமான திருவாய்மொழி. அதனை ஸாக்ஷாத்கரித்தவரும் க்ருஷ்ண த்ருஷ்ணையே வடிவெடுத்ததென்னலாம்படி க்ருஷ்ணபக்தி மிகுந்தவருமான ஸ்ரீசடகோப மஹர்ஷியை ஸேவிக்கிறோமென்கை. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் இது ஆறுவது ச்லோகமாதலால் அவ்விடத்து நமது வியாக்கியானத்தில் விரிவுரை காண்க. .... .... .... (3)

http://acharya.org

यद्गोसहस्रमपहन्ति तमांसि पुंसां नारायणो वसति यत्र सशंखचक्रः ।
यन्मण्डलं श्रुतिगत प्रणमन्ति विप्रास्तस्मै नमो वकुलभूषणभास्कराय ॥४॥

யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோ வஸதி யத்ர ஸசங்கசக்ர:,
யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா: தஸ்மை நமோ வகுலபூஷணபாஸ்கராய. ()

**யத் கோ ஸஹஸ்ரம் பும்ஸாம் தமாம்ஸி அபஹந்தி, யத்ர நாராயண: ஸசங்க சக்ர: வஸதி, ச்ருதிகதம் யத் மண்டலம் விப்ரா: ப்ரணமந்தி, தஸ்மை வகுலபூஷண பாஸ்கராய நம:.**

ஸூர்யனுடைய ஆயிரம் கிரணங்கள் வெளியிருளைப் போக்குவதுபோல யாவரொரு ஆழ்வாருடைய ஆயிரம் பாசுரங்கள் ஸகல சேதநர்களுடையவும் அகவிருளைத் தொலைக்கின்றனவோ, ஸூர்யனிடத்தில் நாராயணன் சங்கு சக்கரங்களோடு கூடி விளங்குவதுபோல அப்பெருமான் யாவரொரு ஆழ்வாரிடத்தில் அவ்விதமாகவே உறைகின்றானோ, வேதப்ரதிபாத்யமான ஸூர்ய மண்டலத்தை அந்தணர்கள் வணங்குவதுபோல யாவரொரு ஆழ்வாருடைய திவ்ய ஸ்தலம் செவிப்பட்டவுடனே பரம பாகவதர்கள் கையெடுத்துக்கும்பிடுகிறார்களோ அப்படிப்பட்ட நம்மாழ்வாராகிற ஸூர்யனுக்கு வணக்கமாகுக.

* இந்த ச்லோகத்தினால் ஆழ்வார் விலக்ஷணஸூர்யனாக நிரூபிக்கப் படுகிறார். இவ்விடத்தில் "ஆதித்யராமதிவாகர அச்யுதபாநுக்களுக்குப் போகாத வுள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவிக்கடல்வற்றி விகஸியாத போதிற் கமலமலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே" என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையை [வியாக்கியானத்துடன்] அநுஸந்திப்பது. ஸூர்யன் புறவிருளைப் போக்கவல்லன்; வகுளபூஷணபாஸ்கரர் அகவிருளையுமொழிக்க வல்லவர்; ஸூர்யன் *த்யேயஸ் ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயணஸ் ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட:, கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபுர் த்ருதசங்கசக்ர: * என்கிற படியே திவ்யாபரண திவ்யாயுத பூஷிதனான நாராயணனைத் தன்பால் கொண்டவன். வகுள பூஷணபாஸ்கரரும் * கண்கள் சிவந்து பெரியவாய் வாயுஞ்சிவந்து கனிந்து உள்ளே வெண்பலிலகு சுடரிலகுவிலகு மகரகுண்டலத்தன், கொண்டல்வண்ணன் சுடர்முடியன் நான்குதோளன் குனிசார்ங்கன், ஒண்சங்கதை வாளாழியானொருவனடியேனுள்ளானே * என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தின்படியே அப்படிப்பட்ட எம்பெருமானைத் தம்மிடத்தே கொண்டவர்.

இனி மூன்றாவது பாதத்தில் சிலேடை. ச்ருதிகதம் என்பதற்கு ஸூர்ய மண்டல பக்ஷத்தில் வேதப்ரதிபாத்ய மென்று பொருள். * த்ருசே விச்வாய ஸூர்யம் * இத்யாதி வேதவாக்கியங்களினால் கூறப்படுகிற ஸூர்யமண்டலத்தை அந்தணர்கள் முச்சந்தியும் ஸந்த்யா வந்தன ப்ரகாணத்தில் வணங்குகின்றார்கள். ஆழ்வார்பக்ஷத்தில், ச்ருதி என்பதற்குக் காது என்று பொருள். ஆழ்வாருடைய மண்டலமாவது திருவழுதி வளநாடு; அல்லது திருக்குருகூர். அந்தத் திருநாமம் யாராவது சொல்லக் காதில் விழுந்தவாறே * விப்ரா பாகவதாஸ் ஸ்ம்ருதா: * என்னப்பட்ட பாகவதர்களனைவரும் கைகூப்பி வணங்குவர்களிறே. ஆக இவ்வகைகளால் பாஸ்கரனென்னத்தக்க ஆழ்வாரை வணங்குவோமென்றதாயிற்று. (4)

पत्युः श्रियः प्रसादेन प्राप्तसार्वज्ञ्यसंपदम् । प्रपन्नजनकूटस्थं प्रपद्ये श्रीपराङ्कुशम् ॥५॥

பத்யுச் ச்ரிய: ப்ரஸாதேந ப்ராப்தஸார்வஜ்ஞ்யஸம்பதம்,
ப்ரபந்ந ஜநகூடஸ்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குசம். (5)

**ச்ரிய: பத்யு: ப்ரஸாதேந ப்ராப்த ஸார்வஜ்ஞ்ய ஸம்பதம் ப்ரபந்ந ஜந கூடஸ்தம் ஸ்ரீ பராங்குசம் ப்ரபத்யே.**

திருமால் திருவருளால் ஸாவஜ்ஞத்வமாகிற ஸம்பத்தைப் பெற்றவரும் ப்ரபந்ந ஜனங்களுக்குத் தலைவருமான நம்மாழ்வாரைத் தஞ்சமாகப் பற்றுகிறேன்.

http://acharya.org

*மயர்வற மதிநல மருளினன் யவனவன்* என்று தம் திருவாக்காலே தாமே யருளிச் செய்யலாம்படி திருமாலருளால் ஸர்வஜ்ஞத்வம் பெற்று அதனால் ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வாரைப் பணிகின்றேனென்கை. “விப்ரர்க்கு கோத்ரசரண ஸூத்ரகூடஸ்தர் பராசர பாராசர்ய போதாயநாதிகள்; ப்ரபந்நஜந கூடஸ்தர் பராங்குச பரகால யதிவராதிகள்” என்ற ஆசார்யஹ்ருதய சூர்ணை இங்கு அநுஸந்தேயம். ... ... ... (5)

शठकोपमुनिं वन्दे शठानां बुद्धिदूषकम् । अज्ञानां ज्ञानजनकं तिन्त्रिणीमूलसंश्रयम् ॥६॥

சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம்,
அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜநகம் திந்த்ரிணீமூலஸம்ச்ரயம். (6)

**சடாநாம் புத்திதூஷகம் அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜநகம் திந்த்ரிணீ மூல ஸம்ச்ரயம் சடகோபமுநிம் வந்தே.** குடிலபுத்திகளுடைய தூர்ப்புத்தியைத் தொலைப்பவரும் அறிவில்லாதவர்களுக்கு நல்லறிவை நல்குமவரும் திருப்புளியாழ்வாரடியிலே வீற்றிருப்பவருமான நம்மாழ்வாரை வணங்குகின்றேன்.

* தீமனத்தவர்களுடைய தீமனத்தைக் கெடுத்து, அறிவிலிகளுக்கு மருவித் தொழும் மனமேதந்து திருப்புளியாழ்வாரடியில் வாழ்ச்சியையே தமக்கு நிரூபகமாகக் கொண்ட ஆழ்வாரைத் தொழுகிறேனென்கை. ... .... .... (6)

वकुलाभरणं वन्दे जगदाभरणं मुनिम् । यः श्रुतेरुत्तरं भागं चक्रे द्राविडभाषया ॥७॥

வ்குலாபரணம் வந்தே ஜகதாபரணம் முநிம்,
யச் ச்ருதேருத்தரம் பாகம் சக்ரே த்ராவிடபாஷயா. (7)

**ய: ச்ருதே: உத்தரம் பாகம் த்ராவிடபாஷயா சக்ரே, (தம்)ஜகதாபரணம் வகுலாபரணம் முநிம் வந்தே.** யாவரொரு ஆழ்வார் வேதத்தின் உத்தரகாண்டமாகிய உபநிஷத்தைத் தமிழ்மொழியினால் வெளியிட்டருளினரோ, உலகுக்கெல்லாம் அலங்காரபூதரான அந்த நம்மாழ்வாரை வணங்குகிறேன்.

இந்த பராங்குசாஷ்டகத்தில் எட்டாவது ச்லோகமாக *நமஜ்ஜநஸ்ய* என்கிற ச்லோகம் அநுஸந்திக்கப்பட்டுவருகிறது; அது நக்ஷத்ரமாலிகையில் ஒன்பதாவது ச்லோகமாதலால் இதற்கடுத்தபடியாகவுள்ள அந்தஸ்தோத்ரத்தினுரையில் அதற்குப் பொருள் கண்டு கொள்வது. அந்தச்லோகம் வருமாறு.—

நமஜ்ஜநஸ்ய சித்தபித்திபக்திசித்ரதூலிகா பவாஹிவீர்யபஞ்ஜநே நரேந்த்ரமந்த்ரயந்த்ரணா,
ப்ரபந்நலோககைரவப்ரஸந்நசாருசந்த்ரிகா சடாரிஹஸ்தமுத்ரிகா ஹடாத் துநோது மே தம:. (8)

இந்த ச்லோகத்திற்கு முன்னே,

வகுளாலங்க்ருதம் ஸ்ரீமத் சடகோபபதத்வயம்,
அஸ்மத்குலதநம் போக்யம் அஸ்து மே மூர்த்நிபூஷணம்.

என்கிற ச்லோகம் சிலரால் அநுஸந்திக்கப்படுவதுண்டு. அதன்பொருளாவது— மகிழமலர்களினால் அலங்கரிக்கப்பட்டதும் எமது குலச்செல்வமும் பரமபோக்யமுமான ஆழ்வார் திருவடியிணையானது என்சென்னிக்கு அலங்காரமாயிடுக. என்பதாம்.

ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் இயற்றிய

**ஸ்ரீ பராங்குசாஷ்டகவுரை**

முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

## மணவாளமாமுனிகளின் பூர்வாச்ரமத் திருப்பேரனுராய் ஆசார்ய பௌத்திரரென்றே ப்ரஸித்திபெற்ற ஜீயர் நாயனுர் அருளிச்செய்த

# நக்ஷத்ரமாலிகை.

(உரையாசிரியர்—ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசார்யர்.)

## அவதாரிகை.

நம்மாழ்வார் விஷயமாகத் திருவவதரித்த இந்த ஸ்துதியானது ஸம்ஸ்க்ருத வாங்மயத்தில் நிகரற்று விளங்குமது. சப்தபுஷ்டியாலும் அர்த்தபுஷ்டியாலும் இப்பிரபந்தத்திற்கு இப்பிரபந்தமே ஒப்பானது என்னலாம். முத்ராலங்காரரீதியில் ச்லோகந்தோறும் இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் வரிசையாக அமைத்திருப்பதனுல் இது நக்ஷத்ரமாலிகையென்று திருநாமம் சாத்தப்பெற்றது.

இந்த ஸ்தோத்ரம் அக்ஷராந்தாதியாக அமைந்ததென்று அறியத்தக்கது.

அதாவது, முன்னின்ற ச்லோகத்தின் முடிந்த அக்ஷரமே அடுத்துவரும் ச்லோகத்தின் முதலக்ஷரமாக வைத்து இயற்றப்பட்டதென்கை. இது தவிர மிகச்சிறந்த மற்றுரதிசயமும் இதுதன்னிலுண்டு; அதாவது—மாலையைத் தொடுக்குமவர்கள் சிறிய அளவில் தொடங்கி மேன்மேல் க்ரமேண பெருக்கடித்துக்கொண்டு போய்நடுப்பாதியில் மிகப்பெரிய அளவாகக்காட்டி அங்கிருந்து படிப்படியாகச் சிறுக்கிக்கொண்டு போவர்களன்றே. அதுவேபோல் இந்தமாலிகையானது முதலில் எட்டெழுத்துள்ள பாதங்கொண்ட அநுஷ்டுப்பில் ஆரம்பிக்கப்பட்டு, பதின்மூன்ருவது ச்லோகமளவும் க்ரமேண ஒவ்வோரெழுத்தாக ஏற்றிக்கொண்டுபோய்,

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச்லோகம். | 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. | 11. | 12. | 13. |
| பாதாக்ஷரம். | 8. | 9. | 10. | 11. | 12. | 13. | 14. | 15. | 16. | 17. | 18. | 19. | 20. |

இப்படி பதின்மூன்று ச்லோகங்களை க்ரமேண அபிவ்ருத்தமாக்கிக் கொண்டுபோய் நன்னடுவிலுள்ளதான பதினுன்காவது ச்லோகமொன்றைமாத்திரம் இருபத்தோரெழுத்துக்கள் கொண்டபாதமுடைய [ஸ்ரக்தரா] வ்ருத்தத்திலமைத்து, அடுத்த பதினைந்தாவதுச்லோகம் முதல்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச்லோகம். | 15. | 16. | 17. | 18. | 19. | 20. | 21. | 22. | 23. | 24. | 25. | 26. | 27. |
| பாதாக்ஷரம் | 20. | 19. | 18. | 17. | 16. | 15. | 14. | 13. | 12. | 11. | 10. | 9. | 8. |

இப்படி பதின்மூன்று ச்லோகங்களை அடைவே சிறுக்கடித்துக் கொண்டுபோய் ஒழுங்குபட முடித்திருக்குமழகு மிக வியக்கத்தக்கது. மாலிகைக்கு நடுநாயகமாயிருக்கின்ற பதினுன்காவதுச்லோகத்தைத் தனிப்படவைத்து மற்றச்லோகங்களை இரண்டுதண்டையாகக் கையிலெடுத்துப்பார்த்தால் அளவு சிறிதும் ஏற்றத்தாழ்வுறுமல் மிகவொத்திருக்கும். இரண்டு தண்டைகளாகச் சேர்க்கிறபோது முதல் ச்லோகமும் (27ஆம்) முடிவு ச்லோகமும் ஒன்று சேருமாதலால் அவையிரண்டும் ஓரேயளவான வ்ருத்தமாயிருக்கும். இரண்டாவது ச்லோகமும் இருபத்தாருவது ச்லோகமும் ஒன்று சேருமாதலால் அவையிரண்டும் ஓரே யளவான வ்ருத்தமாயிருக்கும். மூன்ரும் ச்லோகமும் இருபத்தைந்தாம் ச்லோகமும் ஒன்று சேருமாதலால் அவையிரண்டும் ஓரேயளவான வ்ருத்தமாயிருக்கும். ......... பதின்மூன்ரும் ச்லோகமும் பதினைந்தாம் ச்லோகமும் ஒன்று சேருமாதலால் அவையிரண்டும் ஓரேயளவான வ்ருத்தமாயிருக்கும். என்கிற இந்தவைலக்ஷண்யத்தை ரஸிகர்கள் கண்டு களிப்பது.

http://acharya.org

இந்தஸ்துதியின் பெருமைக்கீடாக மிகவிரிவான வியாக்கியான மொன்று இயற்றித் தெலுங்குலிபியில் இருபத்தைந்தாண்டுகட்கு முன் வெளியிட்டுள்ளோம். இப்போது ஸம்க்ஷிப்தமானவுரை இயற்றப்படுகின்றது. .... ... ... (*)

## (இந்நூலின் தனியன்.)

अस्मासु वत्सलतया कृपया च भूयः स्वेच्छावतीर्णमिव सौम्यवरं मुनीन्द्रम् ।
आचार्यपौत्रमभिरामवराभिधानमस्मद्गुरुं परमकारुणिकं नमामि ॥

**அஸ்மாஸு வத்ஸலதயா க்ருபயா ச பூயஸ் ஸ்வேச்சாவதீர்ணமிவ ஸௌம்யவரம் முநீந்த்ரம்,**
**ஆசார்யபௌத்ரமபிராமவராபிதாநம் அஸ்மத்குரும் பரமகாருணிகம் நமாமி.**

**கருத்து:**—நம்மிடத்தில் வாத்ஸல்யத்தினாலும் பரம க்ருபையினாலும் மணவாளமாமுனிகள் தாமே மீண்டும் நித்யவிபூதியில் நின்றும் இந்த லீலாவிபூதியிலே தம் திருவுள்ளமடியாக வந்து அவதரித்தருளினாரோ வென்று சங்கிக்கவேண்டும்படி அவர்தம்மோடொத்த ஜ்ஞாநாநுஷ்டானங்களையுடையராய் அவருடைய திருப்பேரனாராய்ப் பரமகாருணிகராய் அஸ்மதாசார்யரான அபிராமவராசார்யரென்று வடமொழியிலும் ஜீயர்நாயனாரென்று தென்மொழியிலும் வழங்கப்பெற்ற ஆசிரியரை வணங்குகின்றேனென்கை. ... *

தனியன் உரை முற்றிற்று.

---

## க்ரந்தாரம்பம்.

श्रीमान्पराङ्कुशमुनिर्जीयाद्यज्ज्ञानमुद्रया । नेन्द्रियाश्वयुजो नॄणां नित्यं विषयवीथयः ॥१॥

ஸ்ரீமாந் பராங்குசமுநிர் ஜீயாத் யத்ஜ்ஞாநமுத்ரயா,
நேந்த்ரியாச்வயுஜோ ந்ருணாம் நித்யம் விஷயவீதய:. (1)

### பதவுரை.

**யத்ஜ்ஞாந முத்ரயா விஷய வீதய: ந்ருணாம் இந்த்ரிய அச்வ யுஜ: ந (பவந்தி) (ஸ:) ஸ்ரீமாந் பராங்குச முநி: ஜீயாத்.** யாவரொரு நம்மாழ்வாருடைய ஞான முத்திரையினால் விஷயாந்தரக்ராமங்களானவை மனிதர்களினுடைய இந்திரியங்களாகிற குதிரைகளின் சேர்க்கையைப் பெறுகின்றன வில்லையோ அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ மலிந்த நம்மாழ்வார் வாழ்ந்திடுக.

நம்மாழ்வாருடைய ஞானமுத்திரையை ஸேவிக்கும் மனிசருடைய இந்திரியங்களாகிற குதிரைகள் ஒருகாலும் சப்தாதிவிஷய வீதிகளிற் செல்லமாட்டா; ஞானம் திருந்தி அந்த ஞானமுத்திரையையே கண்ணாரக்கண்டுகொண்டு களித்திருப்பர்களென்றபடி. இப்படி தம்முடைய திருஞானமுத்திரையினால் ஸம்ஸாரிகளையுமீடுபடுத்த வல்லவரான ஆழ்வார் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்தருள வேண்டுமென்று மங்களாசாஸநம் செய்தாராயிற்று.

மூன்றாவது பாதத்தில் அச்விநீநக்ஷத்ரம் முத்ராலங்காரரீதியில் ஸூசிதமாயிற்று. "ஸூச்யார்த்தஸூசநம் முத்ரா ப்ரக்ருதார்த்தபரை: பதை:" என்பர் ஆலங்காரிகர்கள். அச்வயுங் நக்ஷத்ரமென்று வேதவழக்காதலால் அங்ஙனே ப்ரயோகிக்கப்பட்டதென்றுணர்க. ()

यदुरसि भरणीया स्रग्विकसितवकुलानद्धा । स जयति महिमा नाथो मुररिपुपदसक्तो नः ॥२॥

யதுரஸி பரணீயா ஸ்ரக் விகஸிதவகுலாநத்தா.
ஸ ஜயதி மஹிமா நாதோ முரரிபுபதஸக்தோ ந:. (2)

http://acharya.org

| | |
|---|---|
| **யத் உரஸி பரணீயா ஸ்ரக் விகஸித வகுள ஆநத்தா, ஸ: முராரிபு பத ஸக்த: மஹிமா நாத: ஜயது.** | யாவரொரு நம்மாழ்வாருடைய திருமார்பிலே அணிந்து கொள்ளத் தக்கதான மாலையானது மலர்ந்த மகிழம்பூக்களினால் கட்டப்பட்டதோ, அப்படிப்பட்டவராய், எம்பெருமான் திருவடிகளில் ப்ராவண்யமுடையராய் மஹிமைதானே வடிவெடுத்தவராய் ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார் வாழ்ந்திடுக. |

ஆழ்வார் தமது திருமார்பில் மகிழமாலையையணிந்துகொண்டு பகவத்பக்தாக்ரேஸரராய் ப்ரபந்நஜநகூடஸ்தராய் விளங்காநின்றாரென்றதாயிற்று. "மஹிமவாந்" என்று கூறவேண்டுமிடத்து மஹிமா என்றே கூறினது * தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேச: ப்ராஜ்ஞவத் * என்ற ப்ரஹ்மஸூத்ரக் கட்டளையிலே நிர்வஹிக்கத்தக்கது. இதில் முதல்பாதத்திலே பரணீ நக்ஷத்ரம் ஸூசிதம். .... ... (2)

नन्ताऽनन्तांघ्रिनलिनयुग्मे कर्ता लोकार्तिकबलनानाम् ।

भद्राय द्राविडनिगमानां द्रष्टा पुष्टाय वकुलभृत्स्यात् ॥३॥

நந்தாநந்தாங்க்ரிநலிநயுக்மே கர்த்தா லோகார்த்திகபலநாநாம்,
பத்ராய த்ராவிடநிகமாநாம் த்ரஷ்டா புஷ்டாய வகுலப்ருத் ஸ்யாத். (3)

| | |
|---|---|
| **அநந்த அங்க்ரி நளிந யுக்மே நந்தா, லோக ஆர்த்தி கபளநாநாம் கர்த்தா, த்ராவிட நிகமாநாம் த்ரஷ்டா வகுள ப்ருத் புஷ்டாய பத்ராய ஸ்யாத்.** | எம்பெருமானுடைய திருவடித் தாமரையிணையில் வணங்குவதே தொழிலாயிருப்பவரும் உலகத்தவர்களின் ஆர்த்திகளை யெல்லாம் கபளீகரிப்பவரும் தமிழ் வேதமாகிய திவ்யப் பிரபந்தங்களை ஸாக்ஷாத்கரித்தவரும் மகிழ்மாலை மார்பினருமான நம்மாழ்வார் நமக்கு மிகுந்த மங்களங்களை யளிப்பவராக ஆகவேணும். |

* துயரறு சுடரடிதொழு தெழென்மனனே * யென்று எம்பெருமானுடைய திருவடிகளையே தொழுமியல்வினராய் நம்போல்வாருடைய துயரங்களைத் தொலைத்தருள்பவராய், * நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே * என்கிறபடியே தமிழ்மறைகளாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களையும் தாம் ஸாக்ஷாத்கரித்து வெளியிட்டருளினவரான நம்மாழ்வார் நமக்கு மிகுந்த நன்மைகளையளித்தருள வேணுமென்றதாயிற்று.

இதில் இரண்டாவது பாதத்தில் கார்த்திக மென்று நக்ஷத்ரஸூசநம். "த்ராவிடநிகமாநாம் த்ரஷ்டா புஷ்டாய பத்ராய ஸ்யாத" என்று அந்வயம். .... (3)

स्यादेव सा मे फणितिः शठारेः ययोदितोच्चैस्सरणिर्जनानाम् ।

आरोहिणी नाप्यवरोहिणी हि वेदोदिता तु द्वयमभ्युपैति ॥४॥

ஸ்யாதேவ ஸா மே பணிதிச் சடாரேர் யயோதிதோச்சைஸ் ஸரணிர் ஜநாநாம்,
ஆரோஹிணீ நாப்யவரோஹிணீ ஹி வேதோதிதா து த்வயமப்யுபைதி. (4)

| | |
|---|---|
| **யயா உதிதா உச்சைஸ் ஸரணி: ஜநாநாம் ஆரோஹிணீ; அவரோஹிணீ அபி ந-வேதோதிதா ஸரணிஸ் து த்வயம் அப்யுபைதி; சடாரே: ஸா பணிதி: ஏவ மே ஸ்யாத்.** | யாதொரு நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்தியினால் தெரிவிக்கப்பட்ட உயர்ந்த மார்க்கமானது நம்போன்ற ப்ரபந்ந ஜனங்களுக்கு உயர ஏற்றுமதுவேயன்றி கீழே யிறக்குமதாகவுமல்லாததோ ; வடமொழி வேதத்தினால் தெரிவிக்கப்பட்ட வழியோ வென்னில்; உயர்கதியில் சேர்ப்பதும் அதோகதியில் தள்ளுவதுமான இரண்டுபடியையும் ஏற்கின்றதன்றோ ; (அப்படியன்றிக்கே உயர்கதிக்கே ஸாதநமாகின்ற) நம்மாழ்வாருடைய அவ்வருளிச் செயலேஎனக்கு வாசோவிதேயமாகக் கடவது. |

வேதத்திற்காட்டிலும் ஆழ்வாரருளிச்செயல்களுக்குண்டான ஏற்றத்தை இந்த ச்லோகத்தாலும் மேல் ச்லோகத்தாலுமருளிச்செய்கிறார். "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்று கீதையிற் சொன்னபடி முக்குணங்கட்கும் வசப்பட்ட மனிசரை நோக்கியவதரித்த வடமொழி வேதமானது அதிகாராநுகுணமாக முக்திஸாதநங்களையும் புக்திஸாதநங்களையும் ஒருங்கே காட்டியிருக்கையாலே முமுக்ஷுபுபுக்ஷு ஸாதாரணமாயிருக்கும்; அருளிச்செயல் அங்ஙனன்றிக்கே மோக்ஷைகஹேதுவான ஸாரதமசாஸ்த்ரமாகையாலே முமுக்ஷுக்களான உத்தமாதிகாரிகளுக்கே உபஜீவ்யமாயிருக்கும் என்றாயிற்று.

இதில் மூன்றாவதுபாதத்தில் ரோஹிணீ நக்ஷத்ரம் ஸூசிதம். ... ... (4)

तिलकमाह न काचिदपि श्रुतौ त्रिजगतामृगशीर्षसमुत्थिता ।
स्फुटतरं वकुलाभरणीयवाक् पुरुषमादिमशेषपदैरपि ॥५॥

திலகமாஹ ந காசிதபி ச்ருதௌ த்ரிஜகதாம்ருகசீர்ஷஸமுத்திதா,
ஸ்புடதரம் வகுலாபரணீயவாக் புருஷமாதிமசேஷபதைரபி. (5)

**ச்ருதௌ அசீர்ஷ ஸமுத்திதா காசித் அபி ருக் த்ரிஜகதாம் திலகம் ந ஆஹ; வகுளாபரணீய வாக் அசேஷபதை: அபி ஆதிம் புருஷம் ஸ்புடதரம் ஆஹ.**

வேதந்தன்னில் தலையான வேதாந்தத்திலுள்ள தன்றிக்கே கர்மகாண்டத்திலுள்ளதான ஒரு வாக்யமும் மூவுலகுக்கும் திலக பூதனான எம்பெருமானைச் சொல்லிற்றில்லை; நம்மாழ்வாரருளிச் செயலோவென்னில், எல்லாப் பதங்களினாலும் ஆதிபுருஷனான எம்பெருமானையே மிகவிளக்கமாகத் தெரிவிக்கின்றது.

ஆழ்வார் திருவிருத்தத்தில் "திருமாலவன் கவியாது கற்றேன்" என்று ப்ரதிஜ்ஞை செய்தபடியே * மாற்றங்கள் ஆய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல் * என்றும் * உரிய செல்லாலிசை மாலைகளேத்தியுள்ளப் பெற்றேற்கு * என்றும் எம்பெருமானையே விஷயமாகக்கொண்டு அமைத்தருளின அருளிச்செயலின் பெருமை வடமொழி வேதத்திற்கு எங்ஙனே பொருந்தும்? அம்மறையானது கர்மகாண்டமென்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் பாகுபாடுற்று ப்ரஹ்மகாண்டமெனும் உபநிஷத்பாகத்தினால் மாத்திரமே பகவத் ஸ்வரூபரூபகுண விபூதிகளை ப்ரதிபாதிக்கின்றதேயன்றி கர்மகாண்டத்தினால் அவற்றை ப்ரதிபாதிக்கவில்லையன்றோ. அருளிச்செயல் அங்ஙனன்றிக்கே ஸகலபதங்களாலும் ஸாக்ஷாத்தாகவும் ஸுஸ்பஷ்டமாகவும் எம்பெருமானையே ப்ரதிபாதிக்கையாகிற ஏற்றம் பெற்றது என்றாயிற்று.

* வேதைச் ச ஸர்வைரஹமேவ வேத்ய: * என்கிற பகவதுக்தியோடும் * வேத்யோ வேதைச் ச ஸர்வைரஹமிதி பகவாந் ! ஸ்வேந ச வ்யாசகர்த்த * என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியோடும் முரண்பாடு சங்கியாமைக்காக ஸ்புடதரம் என்றிட்டபடி.

இதில் இரண்டாவது பாதத்தில் ம்ருகசீர்ஷ நக்ஷத்ரம் ஸூசிதம். "அசீர்ஷஸமுத்பவா" என்றும் பாடமுண்டு; பொருள் ஒன்றே. சீர்ஷம்—தலை; வேதத்தின் தலையென்று வேதாந்தத்தைச் சொன்னபடி. "ச்ருதி சிரஸி" என்றாரிறே ஸ்வாமி தாமும். ... (5)

पित्रादिस्सकलविधोऽपि बन्धुवर्गो यस्यासीत्सरसिजवासिनीसहाय: ।
आविस्स्युर्घनकरुणारसावसेकैरार्द्रा मे वकुलभृत: कटाक्षपाता: ॥६॥

பித்ராதிஸ் ஸகலவிதோபி பந்துவர்க்கோ யஸ்யாஸீத் ஸரஸிஜவாஸிநீஸஹாய:,
ஆவிஸ்ஸ்யுர் கநகருணாரஸாவஸேகைரார்த்ரா மே வகுலப்ருத: கடாக்ஷபாதா:. (6)

http://acharya.org

யஸ்ய பித்ராதி: ஸகல வித: அபி பந்துவர்க்க: ஸரஸிஜ வாஸிநீ ஸஹாய: ஆஸீத், (தஸ்ய) வகுலப்ருத: கந கருணாரஸ அவஸேகை: ஆர்த்ரா: கடாக்ஷ பாதா: மே ஆவிஸ் ஸ்யு:.

யாவரொரு நம்மாழ்வார்க்குத் தந்தை தாய் முதலான ஸகலவிதமான பந்துவர்க்கமும் திருமகள் கொழுநனான எம்பெருமானே ஆயினனோ, அந்த நம்மாழ்வாருடைய இடையறாத கருணாரஸப் பெருக்கினால் குளிர்ந்த திருக்கண்ணோக்கங்களானவை என் பொருட்டு ஆகவேணும். [அவ்வாழ்வார் என்னையே குளிரக்கடாக்ஷித்தருளவேணுமென்றபடி.]

* சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய்தந்தையுமவரேயினியாவாரே * என்று எம்பெருமானையே ஸகலவிதபந்துவுமாகக் கொண்ட ஆழ்வாருடைய அருள்வெள்ளம் ததும்பிய திருக்கண்ணோக்கங்கள் அடியேன்பால் பெருகவேணுமென்று வேண்டினாராயிற்று. இதில் நான்காவது பாதத்தில் ஆர்த்ரா நக்ஷத்ரம் ஸூசிதம். (6)

तामाश्रयामि करुणां वकुलाभिरामां याऽसौ पुनर्वसुमतीवलयेऽवतीर्णा ।
प्रज्ञादृशोन्मिषितया प्रथितानुभावा ज्योतिः परं यदनिदं तदिदं चकार ॥७॥

தாமாச்ரயாமி கருணாம் வகுலாபிராமாம் யாஸௌ புநர்வஸூமதீவலயேவதீர்ணா,
ப்ரஜ்ஞாத்ருசோந்மிஷிதயா ப்ரதிதாநுபாவா ஜ்யோதி: பரம் யதநிதம் ததிதம் சகார. (7)

யா அஸௌ வஸூமதீ வலயே புந: அவதீர்ணா ஸதீ ப்ரதித அநுபாவா உந்மிஷிதயா ப்ரஜ்ஞாத்ருசா யத் அநிதம் பரம் ஜ்யோதி: தத் இதம் சகார, தாம் வகுல் அபிராமாம் கருணாம் ஆச்ரயாமி.

(நம்மாழ்வாரென்கிற) யாதொரு கருணாமூர்த்தியானது பூமண்டலத்தில் திருவவதரித்ததாகி எங்கும் ப்ரஸித்தி பெற்ற பெருமையையுடையதாய் நன்றாக மலர்ந்த ஞானக்கண்ணினால் ஒருவர் கண்ணுக்கு மெட்டாமலிருந்ததொரு பரஞ்சோதியை ஸாக்ஷாத்கரித்ததோ, மகிழ்மாலையினால் அழகு பெற்ற அந்த கருணா மூர்த்தியைப் பணிகின்றேன்.

* அருள்கொண்டாடு மடியவரின்புற, அருளினான் அவ்வருமறையின் பொருள், அருள் கொண்டாயிரமின் தமிழ் பாடினானருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே * என்ற மதுரகவியார் பாசுரத்தையுட்கொண்டு ஆழ்வார் அருளே வடிவெடுத்தவரென்கிறாரிதில். 'கருணாவந்தம்' என்றோ 'கருணாசாலிநம்' என்றோ கூறாமல் கருணாம் என்றே ஆழ்வாரைக் கூறினது-அவருடைய கருணை அப்ரமேயமென்று காட்டினபடி. இப்படி பரமகாருணிகரான ஆழ்வார் இவ்விருள் தருமாஞாலத்திலவதரித்து, * என்றேனும் கட்கண்ணால்காணாதவவ்வுருவை நெஞ்சென்னுமுட்கண்ணேல் காணுமுணர்ந்து * (பெரியதிருவந்தாதி) என்று தாமேயருளிச்செய்தபடி உட்கண்ணினால் பரஞ்சுடரான பரமபுருஷனை ஸாக்ஷாத்கரித்தபடியினாலே இவரே நமக்கு ஆச்ரயணீயர் என்றாராயிற்று. "யத் பரம் ஜ்யோதி : அநிதம் தத் யா கருணா இதம் சகார, தாம் ஆச்ரயாமி" என்று அந்வயமாகக் கடவது. "இதம : ப்ரத்யக்ஷ கதம் ஸமீபதரவர்த்திச ஏததோ ரூபம், அதஸஸ்து விப்ரக்ருஷ்டம் ததிதி பரோக்ஷே விஜாநீயாத்" என்பது சாஸ்த்ரஜ்ஞஸமயமாதலால் இதம் என்று ப்ரத்யக்ஷவிஷயமானதைச் சொல்லுகிறது; அநிதம் என்று பரோக்ஷமானதைச் சொல்லுகிறது. * கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி நிற்கும் பரஞ்சோதியைக் கண்ணாரக் கண்டு களித்தவரிறே ஆழ்வார். இதில் இரண்டாவது பாதத்தில் புநர்வஸூ நக்ஷத்ரம் ஸூசிதம். ... (7)



http://acharya.org

रचितवति रमाया नायकस्यांघ्रिपुष्यत्प्रणयरससुधाब्धिस्रोतसि स्वैरगाहम् ।
प्रभवति कलिघर्मप्रावृषेण्याम्बुवाहे वकुलधरमुनीन्द्रे तापवार्ता कथं नः ॥८॥

**ரசிதவதி ரமாயா நாயகஸ்யாங்க்ரிபுஷ்யத்**
**ப்ரணயரஸஸுதாப்திஸ்ரோதஸி ஸ்வைரகாஹம்,**
**ப்ரபவதி கலிகர்மப்ராவ்ருஷேண்யாம்புவாஹே**
**வகுலதரமுநீந்த்ரே தாபவார்த்தா கதம் ந:!** (8)

***ரமாயா: நாயகஸ்ய அங்க்ரி புஷ்யத் ப்ரணயரஸ ஸுதாப்தி ஸ்ரோதஸி ஸ்வைர காஹம் ரசிதவதி கலிகர்ம ப்ராவ்ருஷேண்ய அம்புவாஹே வகுலதர முநீந்த்ரே ப்ரபவதி ஸதி ந: தாப வார்த்தா கதம்?***

திருமாமகள் கொழுநனை எம்பெருமானுடைய திருவடிகளில் வளர்கின்ற அன்பாகிற அமுத வெள்ளத்திலே யதேஷ்டமான அவகாஹனத்தைச் செய்து கலிஸந்தாபத்தைப் போக்கவல்ல கார்முகிலாயிராநின்ற நம்மாழ்வார் நமக்கு இறைவராயிருக்கும் போது நமக்குத் தாபமென்கிற பேச்சுக்கு இடமுண்டோ?

** கண்டவாற்றால் தனதேயுலகென நின்றான் தன்னை வண்டமிழ்நூற்க நோற்றேன் அடியார்க்கின்பமாரியே * என்று தாமேயருளிச்செய்யலாம்படி கார்காலத் தெழுகின்ற கார்முகிலாயிருப்பவர் ஆழ்வார். உலகில் மேகமானது கடலிலேபுக்கு நீரை முகந்துகொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது; "ஆழியுட்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி" என்றாள் ஆண்டாளும். ஆழ்வாராகிற இக்காளமேகம் எந்தக்கடலிலே அவகாஹித்ததென்னில்; [***ரமாயா: நாயகஸ்ய அங்க்ரிபுஷ்யத் ப்ரணயரஸஸுதாப்தி ஸ்ரோதஸி ஸ்வைரகாஹம் ரசிதவதி***] * காதல் கடல் புரையவிளைவித்த காரமர்மேனி * என்றும் * காதல் கடலில் மிகப்பெரிதால் * என்றும் தாமேயருளிச் செய்தபடி திருமால்விஷயமான காதல் ஒருகடல் போன்றதாயிற்று; யதேஷ்டமாக அவகாஹிக்கப் பெற்றது இக்காளமேகம். உப்புக்கடலிலேபடியும் மேகம்போலன்றிக்கே அமுதக்கடலிலேபடிந்த மேகமென்கிறது **ஸுதாப்திஸ்ரோதஸி** என்பதனால். * **பக்தி: ச்ருங்காரவ்ருத்த்யா பரிணமதி*** என்கிறபடியே ஆழ்வாருடைய பக்தியானது நாயகீஸமாதியாலே அநுபவிக்கவும் அமைந்ததனால் "**ப்ரணயரஸஸுதாப்தி**" என்றது. உலகில் காளமேகம் சரீரத்தில் தோன்றும் ஸாதாரணதாபத்தையே போக்கவல்லது; ஆழ்வாராகிற காளமேகம் கலிஸந்தாபத்தையும் போக்கவல்லது என்று வாசிதோற்றப்பேசுகிறார் [**கலிகர்மப்ராவ்ருஷேண்யாம்புவாஹே**] என்று. வர்ஷாகாலத்தில் தோன்றுமது **ப்ராவ்ருஷேண்ய** மெனப்படும். இப்படிப்பட்ட ஆழ்வாருடைய நிழலிலே வர்த்திக்கும் நமக்கு ஒருநாளும் தாபமில்லையென்றாராயிற்று. இந்த ச்லோகத்தில் முதல்பாதத்தில் **புஷ்ய** நக்ஷத்ரம் ஸூசிதம்.* **(8)**

नमज्जनस्य चित्तभित्तिभक्तिचित्रतूलिका भवाहिवीर्यभञ्जने नरेन्द्रमन्त्रयन्त्रणा ।
प्रपन्नलोककैरवप्रसन्नचारुचन्द्रिका शठारिहस्तमुद्रिका हठाद्धुनोतु मे तमः ॥९॥

**நமஜ்ஜநஸ்ய சித்தபித்திபக்திசித்ரதூலிகா**
**பவாஹிவீர்யபஞ்ஜநே நரேந்த்ரமந்த்ரயந்த்ரணா,**
**ப்ரபந்நலோககைரவப்ரஸந்நசாருசந்த்ரிகா**
**சடாரிஹஸ்தமுத்ரிகா ஹடாத் துநோது மே தம:.** (9)

http://acharya.org

**நமத் ஜநஸ்ய சித்த பித்தி பக்தி சித்ர தூலிகா, பவ அஹி வீர்ய பஞ்ஜநே நரேந்த்ர மந்த்ர யந்த்ரணா, ப்ரபந்நலோக கைரவ ப்ரஸந்ந சாரு சந்த்ரிகா, சடாரி ஹஸ்த முத்ரிகா மே தம: ஹடாத் துநோது.**

தம்மை வணங்குமவர்களுடைய ஹ்ருதயமாகிற சுவரிலே பக்தியாகிற சித்திரத்தை யெழுதுங் கருவியாயும், ஸம்ஸாரமாகிற ஸர்ப்பத்தினுடைய வீர்யத்தைத் தணிக்கும் விஷயத்தில் விஷவைத்யனுடைய மந்த்ரப்ரயோகச் சிடிகை போன்றதாயும், ப்ரபந்ந ஜநங்களாகிற ஆம்பல் மலர்களை விகஸிப்பிக்கவல்ல அழகிய நிலாப்போன்றதாயுமிருக்கிற நம்மாழ்வாருடைய திருக்கைத்தலமுத்திரையானது என்னுடைய அகவிருளை எப்படியாவது தொலைத்தருளவேணும்.

ஆழ்வாருடைய ஸ்ரீஹஸ்தமுத்ரையை வருணிப்பது இந்த ச்லோகம். அடியார்களின் நெஞ்சாகிற சுவரிலே பகவத்பக்தியாகிற ஓவியத்தை யெழுதும் கருவியோ இது! என்னலாயிருந்தது. ஆழ்வார் * **ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவாது** வாகையால் அந்த ஸம்ஸார ஸர்ப்பத்தின் வீர்யத்தைத் தொலைக்கவல்ல விஷவைத்ய மந்த்ர ப்ரயோக ப்ரணாளியோ இது! என்னலாயிருந்தது; ப்ரபந்நஜநங்களாகிற ஆம்பலோடையை அலர்த்தவல்ல நிலவுதானோ இது! என்னலாயிருந்தது. ஆக, பக்த ஜனங்களின் ஹ்ருதயத்திலே பக்தியை யூட்டவல்லதாயும் ஸம்ஸாரஸ்ப்ருஹையை அறுக்கவல்லதாயும் ப்ரபந்நர்களைப் பரமானந்த பரவசராக்கவல்லதாயு மிராநின்ற ஆழ்வாருடைய ஸ்ரீஹஸ்தமுத்ரையானது நம்முடைய அகவிருளை அகற்றவேணும் என்றாராயிற்று. ஹடாத் என்றதனால் நமது தமஸ்ஸு போக்கவரிது என்னுமிடம் ஸூசிதம். "ஹடாத்கரோது" என்பது சிலருடைய பாடம். [**தூலிகா**—எழுதுகோல். **நரேந்த்ர**:—விஷவைத்யன்.]

இதில் இரண்டாவது பாதத்தில் "**பவாஹி**" என்றவிடத்தில் **அஹி**பதத்தினால் ஆச்ரேஷா நக்ஷத்ரம் ஸூசிதம். "**ஆச்ரேஷா நக்ஷத்ரம் ஸர்ப்பா தேவதா**" என்பது வேதவாக்யம். தேவதையைச் சொல்லும்முகத்தால் நக்ஷத்ரத்தை ஸூசிப்பிக்கிற புடையுமுண்டு. மேலே அநூராதாநக்ஷத்ரத்தையும் அதன் தேவதையைச் சொல்லும் மித்ரசப்தத்தினால் (ச்லோ. 17 ல்) ஸூசிப்பித்திருக்கிறபடியும் இங்கே நினைக்கத்தக்கது. .... (9)

मनस्स्फटिकदर्पणप्रतिफलत्परब्रह्मणः प्रदर्शनमिवाचरन् प्रथितबोधमुद्राङ्कितः ।
सतामभयशंसिता भवभयाभितप्तात्मनाम् अघानि शमयेत नः शठरिपोरवामः करः ॥१०॥

மநஸ்ஸ்படிகதர்ப்பணப்ரதிபலத்பரப்ரஹ்மண :
ப்ரதர்சநமிவாசரந் ப்ரதிதபோதமுத்ராங்கித :,
ஸதாம் அபயசம்ஸிதா பவபயாபிதப்தாத்மநாம்
அகாநி சமயேத நச் சடரிபோரவாம : கர : (10)

**மநஸ் ஸ்படிக தர்ப்பண ப்ரதிபலத் பரப்ரஹ்மண: ப்ரதர்சநம் ஆசரந் இவ (ஸ்தித:) ப்ரதித போதமுத்ரா அங்கித: பவ பய அபிதப்த ஆத்மநாம் ஸதாம் அபய சம்ஸிதா சடரிபோ: அவாம: கர: ந: அகாநி சமயேத.**

தமது திருவுள்ளமாகிற ஸ்படிகக்கண்ணாடியிலே ப்ரதிபலித்துத் தோன்றுகிற பரப்ரஹ்மத்தைக் காட்டாநின்றதுபோலிருப்பதும் புகழ்பெற்ற ஞானமுத்திரையினால் அடையாளம் பெற்றதும் ஸம்ஸார பீதியினால் தபிக்கின்ற நெஞ்சினரான ஸாத்விகர்களுக்கு அபயமளிக்கவல்லதுமான நம்மாழ்வாருடைய வலத்திருக்கையானது நம்முடைய பாவங்களைத் தொலைக்கக்கடவது.

கீழ்ச்லோகத்தில் ஹஸ்தமுத்திரையை வருணித்தார்; இந்தச்லோகத்தில் முத்ராஞ்சிதமான ஸ்ரீஹஸ்தத்தை வருணிக்கிறார். அபயமுத்ரையோடு கூடின திருக்கரமானது ஹ்ரு

http://acharya.org

தயத்திற்கு நேராக இருப்பதனால் ஹ்ருதயமாகிற ஸ்படிகக்கண்ணாடியில் ப்ரதிபலித்துத் தோன்றாநின்ற எம்பெருமானை எடுத்துக் காட்டுகின்றது போலும்! என்னலாம்படியுள்ளது. ஸம்ஸார வெக்காயத்தாலே அஞ்சிக்கிடக்கின்ற பரம ஸாத்விகர்களுக்கு அபயமளிக்கின்றதென்னலாம்படியுமுள்ளது. 'அப்படிப்பட்ட ஆழ்வாரது திருக்கைத்தலம் நமது ப்ரபல விரோதிகளான பாபங்களைப் போக்கியருளவேணுமென்றதாயிற்று.

ஆழ்வார் திருக்கரத்திலே அபயமுத்ரையிருந்தாலன்றோ "ஸதாம் அபய சம்வீதா" என்னலாம்; "ப்ரதித **போத** முத்ராங்கித:" என்கிற விசேஷணத்தினால் ஞான முத்திரையுள்ளதாகச் சொல்லிவைத்து அபயமுத்ரையின் கார்யத்தை எங்ஙனே கூறலாமென்று சங்கிக்கவேண்டா; ஞானமுத்ரையின் ஸந்நிவேசந்தானே அபயமுத்ரை போலவும் காணக்கூடியதாகையாலே சொல்லக் குறையில்லை.

இதில் நான்காவது பாதத்தில் முதலிரண்டு அக்ஷரங்களினால் (**மகா**) நக்ஷத்ரம் ஸூசிதம். நக்ஷத்ரத்தைக் கூறுமிடைவில் (**மகா**) என்று கவர்க்கத்விதீயமாகச் சிலர் மயங்கி இந்தச்லோகத்தில் அவ்வக்ஷரமில்லையேயென்று சங்கிப்பதுண்டு; வேதத்தில் கவர்க்கசதுர்த்தமாகவே நக்ஷத்ரநாமம் பலவிடங்களிலும் ஓதப்பட்டிருப்பதால் அதுவே சுத்தமானசொல்வடிவம்; அதுவேயாயிற்று இங்குமுள்ளது. (10)

रमयतु शठशत्रुरत्युन्नताचारयुक्तैर्जनैः अवनतपदपद्मयुग्मोऽनुकम्पामृताम्भोनिधिः ।
बहुविघकृतपूर्वफल्गुन्यगाचारचिन्ताकुलं हृदयमसदृशात्मपादारविन्दानुषङ्गान्मम ॥११॥

ரமயது சடசத்ருரத்யுந்நதாசாரயுக்தைர் ஜநை:
அவநதபதபத்மயுக்மோநுகம்பாம்ருதாம்போநிதி:,
பஹுவிதக்ருதபூர்வபல்குந்யகாசாரசிந்தாகுலம்
ஹ்ருதயம் அஸத்ருசாத்மபாதாரவிந்தாநுஷங்காந் மம. (11)

**அத்யுந்நத ஆசார யுக்தை: ஜநை: அவநத பத பத்ம யுக்ம: அநுகம்பா அம்ருத அம்போநிதி: சடசத்ரு: பஹுவித-க்ருதபூர்வ-பல்குந்யகாசார-சிந்தா ஆகுலம் மம ஹ்ருதயம் அஸத்ருச ஆத்ம பாதாரவிந்த அநுஷங்காத் ரமயது.**

மிகச்சிறந்த அநுஷ்டானமுள்ள ஸாத்விக ஜநங்களால் வணங்கப்பட்ட திருவடித் தாமரையிணையையுடையவரும் கருணையாகிற அமுதத்திற்குக் கடலாயிருப்பவருமான நம்மாழ்வார் முற்பிறவிகளிலே செய்த பலவகைப்பட்ட இழிதொழில்களைப் பற்றின கவலையினால் கலங்கியிருக்கின்ற எனது மனத்தை ஒப்பற்ற தமது திருவடித்தாமரைகளின் ஸம்பந்தத்தினால் கலக்கம் நீங்கிக் களிக்கச்செய்திடுக.

ஆழ்வார் தமதுதிருவடிஸம்பந்தத்தினால் என்னுள்ளத்தை உகப்பித்தருளவேணுமென்கிறாரிதில். ஆழ்வார் திருவடிஸம்பந்தமடியேனுக்கிருப்பதனால் மனம் தேறியிருக்கிறேனென்று தெரிவித்தவாறு. ஆழ்வார்தாம் எப்படிப்பட்டவரென்ன: பூர்வார்த்தத்திலிரண்டு விசேஷணங்களினால் அவர்பெருமை சொல்லுகிறது. [அத்யுந்நதாசாரயுக்தைர் ஜநை: அவநத பதபத்ம யுக்ம:] * அறுதொழிலந்தணர் வணங்குந் தன்மையன் * என்று எம்பெருமானுக்குச் சொல்லும் பெருமை ஆழ்வார்க்குமுண்டு. * மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே * என்று ஸ்ரீமதுரகவிகள் போல்வாரான அந்தணர்களிறே திருவடிவாரத்தில் படுகாடு கிடந்தது. [அநுகம்பாம்ருதாம்போநிதி:] * அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே * என்னும்படியாக அருட்கடலானவர். இப்படிப்பட்ட ஆழ்வார் [மம ஹ்ருதயம் ரமயது.] இப்போது போலவே என்றும் என்னுள்ளத்தில் நின்று கூத்தாடவேணுமென்கை. தம்முடைய ஹ்ருதயத்திற்கு விசேஷணமிடுகிறார் [பஹுவித-க்ருதபூர்வ-பல்கு-ந்யகாசார சிந்தாகுலம்]

http://acharya.org

# முக்கியமான சில பிழைதிருத்தங்கள்

—அன்பர்கள் மறவாமல் தம்தம் புத்தகங்களில் திருத்திக்கொள்ளவேணும்.

1. நமது ஸத்க்ரந்தப்ரகாசக ஸபா மூலமாய் வெளியிட்ட ஆசார்ய ஹ்ருதயஸாரத்தில்—பக்கம் 173ல், விவேகமுகராய் இத்யாதியான 151 ஆம் சூர்ணையில் "நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுநர் போல்வாரை" என்பதற்குப் பொருள் விவரணம் விடுபட்டு விட்டது. * நளிர்ந்த சீலன் நயாசலன்...செல்வன் என்று பெரியாழ்வாரால் கொண்டாடப்பட்ட செல்வநம்பி* மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டு சித்தன்* என்கிற பெரியாழ்வார் போல்வாரையும், நாதமுனிகள் ஆளவந்தார் போல்வாரையும் இந்த உவமைப் பொருத்தங்களையிட்டு அன்னமென்று சொல்லும்—என்று கூட்டிக்கொள்ளவேணும்.

2. அதிலேயே பக்கம் 182ல் பகலோலக்கமிருந்து இத்யாதியான 157 ஆம் சூர்ணையில் "மூன்று முடிக்குரிய இளவரசுக்கு" என்னும் பகுதிக்குப் பொருள் விவரணம் விடுபட்டது. நம்மாழ்வார் திருவிருத்தத்தில் "பாரளந்த பேரரசே எம்விசும்பரசே எம்மைநீத்து வஞ்சித்தோரரசே" என்கிற பாசுரத்தில் எம்பெருமானுக்கு மூன்றுவகையான ஸாம்ராஜ்யமருளிச் செய்தார். ஸௌலப்யத்துக்காகக் கவித்த முடியொன்றும், பரத்வத்துக்காகக் கவித்த முடியொன்றும், ப்ரணயித்வத்துக்காகக் கவித்த முடியொன்றும் ஆக மூன்று முடிகளுக்குரிய இளவரசு எம்பெருமான்—என்று விவரண முணர்க

3. அதிலேயே பக்கம் 207ல் "அது ஐவரை வெல்வித்து" இத்யாதியான 191 ஆம் சூர்ணையின் விவரணத்தில்—"இரண்டும் மோக்ஷசாஸ்த்ரமேயாகிலும் மோக்ஷார்த்தமாகவன்றிக்கே அந்யார்த்தமாக அவதரித்ததென்கிற குறையுண்டு கீதைக்கு; மோக்ஷார்த்தமாகவே அவதரித்ததென்கிற ஏற்றமுண்டு திருவாய்மொழிக்கு என்றதாயிற்று" என்றிருக்கவேண்டிய வாக்கியம், சில வார்த்தைகள் விடுபட்டு அஸங்கதமாக விழுந்திருக்கிறது; திருத்திக்கொள்க.

## —இனி நித்யாநுஸந்தானவுரையில் திருத்தங்கள்.—

1. பக்கம் 82ல் * மனனகமலமற * என்கிற [கோயில் திருவாய்மொழி 1-1-2.] பாட்டின் பதவுரையில் என்னுயிர் என்கிற மூலமும் அதனுரையும் விடுபட்டது. பதவுரையின் முடிவில், என் நன் உயிர்-எனக்கு நல்ல ஆத்மா என்று கூட்டிக்கொள்க.

2 அதிலேயே பக்கம் 96ல் இரண்டாவது வரியில் அதாவது என்றிருப்பதை சூதாவது என்று திருத்திக்கொள்க.

3. அதிலேயே பக்கம் 98ல் வேங்கடங்கள் என்கிற 6 ஆவது பாட்டின் பதவுரையில் மெய் என்கிற மூலபதமும் அதனுரையும் விடுபட்டது. (வினை முற்றவும் வேம்;) மெய்—இது ஸத்யம். என்றிருக்கவேணும்.

4. அதிலேயே பக்கம் 123ல் * நெடுமாற்கடிமை பாசுரத்தின் பதவுரையில் 'விடும் ஆறு என்பது' என்ற மூலபதங்களின் பின், என் என்பது விடுபட்டது; சேர்த்துக்கொள்க.

5. அதிலேயே இராமானுச நூற்றந்தாதியில் (பக்கம் 12ல்) "மன்னியபேரிருள்" என்னும் 10 ஆம் பாட்டின் இரண்டாமடியின் முடிவில் (மூலத்தில்) தமிழ்த்தலைவன் என்பது விடுபட்டது, கூட்டிக்கொள்க.

6. இராமானுச நூற்றந்தாதியிலேயே (பக்கம் 62) * மயக்கு மிருவினை * என்கிற 101 ஆம் பாட்டின் கருத்துரையில் (வரி 7 ல்) "பாவநத்வத்தை அநுஸந்திப்பதை விட" என்றதன் பின் "போக்யதையை" என்றிருக்கவேண்டியது யோக்யதையை என்று விழுந்திட்டது; திருத்திக்கொள்க.

இன்னமும் ஆங்காங்குச் சில எழுத்துப் பிழைகள் காணப்பட்டன. அவற்றை பக்தர்கள் எளிதாகத் திருத்திக்கொள்ளக்கூடுமென்று இங்குக் குறிப்பிடாது விட்டிட்டோம. நாம் இருப்பது ஓரிடம்; அச்சு நடப்பது மற்றோரிடம்; சோதனங்களைப் பூர்த்தியாக கவனிக்க முடியாமையால் சில பிழைகள்; எழுதும் போதே அநவதாநத்தினால் சில பிழைகள். யாவற்றையும் மஹான்கள் காணுமளவில் திருத்திக்கொள்க. முக்கியமானவற்றை நமக்கும் தெரிவிப்பது

இங்ஙனம்

30—10—48

உரையாசிரியர்:- **அண்ணங்கராசாரியர்.**

http://acharya.org

# சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந சபாவுக்கு இரண்டாவது வருஷச் சந்தா (12—0—0) வரவுகள்

1. D. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வகேட், வேப்பரி.
2. தே. ஸ்ரீனிவாஸய்யங்கார் அதிகாரி, லக்ஷ்மி நாராயணன் ஸன்னதி, ஸிகிந்தராபாத்.
3. தி. அ. கு. கமலம்மாள், காஞ்சீபுரம்.
4. V. R. பாஷ்யசக்ரவர்த்தி ஐயங்கார் B. A. B. L தெப்பகுளம்.
5. ஸ்ரீனிவாஸ ஆழ்வார், கும்பகோணம்
6. K. ஸ்ரீநிவாஸலு பாகவதர், புதுபேட்டை.
7. C. V. கண்ணபிரானவர்கள், சூளை, பெங்களூர்.

## ஷை ஸபையில் இவ்வருஷத்தில் லைப்மெம்பர் பதவியை ஏற்றுக்கொண்ட மஹாநீயர்கள்

1. R. நாராயணையரவர்கள் I. C. S. கீழ்ப்பாக்.
2. K. R. ஸ்ரீனிவாஸய்யங்கார் (Retd. Nazir) கடையகுடி.
3. S. ராமாநுஜதாஸர் B. P. M. குஜிலியம்பாறை (திண்டுக்கல்.)
4. A. S. ராமாநுஜய்யங்கார், ஜமீன்தார், அம்ருதூர்.
5. ஸ்ரீ ஆராவமுது தாதாசாரியர், வக்கீல், கள்ளக்குறிச்சி

## ஸ்ரீ ராமாநுஜன் பத்திரிகைக்காக 4—0—0 சந்தா வரவுகள்.

1. P. M. பாஷ்யமையங்கார், புதுப்பாக்கம்.
2. திருநாராயணையங்கார் வாணிவிலாஸ் மோஹல்லா மைஸூர்.
3. T. P. வெங்கடாசார்யர் M. A. பம்பாய்.
4. பார்த்தசாரதி, மடுங்கா பம்பாய்.
5. S. அமுதாசாரியர். அட்வகேட், திருவல்லிக்கேணி
6. ரங்கஸ்வாமி ஐயங்கார். ஹெட்மாஸ்டர் போர்டு ஹைஸ்கூல் திருக்கோவலூர்
7. K. ராமசந்திராசாரியர், பென்ஷனர், தென்திருப்பேரை.
8. சேஷாத்ரி ஐயங்கார் வக்கீல் கள்ளக்குறிச்சி.
9. P. B. திருவேங்கடாசாரியர் வக்கீல் திண்டிவனம்.
10. V. N. சிங்காரம்பிள்ளை விக்ரவாண்டி.
11. G. கிருஷ்ணமாசாரியர் அட்வொகேட் செங்கற்பட்டு.
12. P. B. பாஷ்யமையங்கார் வக்கீல், செங்கற்பட்டு
13. ரங்கஸ்வாமி ஐயங்கார் தாசில்தார், போளூர்.
14. R. ஜகன்னாத ஐயங்கார். பூனா.
15. ராவ் சாஹிப் S. ராகவ ஐயங்கார் டி. நகர்.
16. P. K ஸ்ரீனிவாசராகவாச்சாரியார் வக்கீல். திண்டிவனம்.
17. C T கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் சப் மாஜிஸ்ட்ரேட் உளுந்தூர்பேட்டை.
18. வக்கீல் நாராயணையங்கார் சிவகெங்கை.
19. P. R. வரதாச்சாரியர். 15. Mint St. P. T. Madras.
20. D. திருவேங்கடாசாரியர், மஞ்சகுப்பம்.
21. ராவ்பஹதூர் R. நரஸிம்ம ஐயங்கார் மதுரை.

Edited Printed & Published by S. R. Varadarajan, B. A., for
Madras Sathgrantha Prakasana Sabha, at Sri Lakshmi Printing Works,
Car Street, Salem, Editor: P. B. Annangaracharya Swami.

http://acharya.org